காலடி

க்ஷேத்திர மஹிமை

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்

காலடி க்ஷேத்திர மஹிமை

திருநெல்வேலி அட்வொகேட்
R. கிருஷ்ணஸ்வாமி அய்யர், M. A., B. L.,
இயற்றியது.

1957

ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ்,
மதுரை.

[0-75

31-1

அட்டவணை.

++++++++

அத்யாயம்.		பக்கம்
1.	பூர்வ சரிதம்	1
2.	காலடி பரிஷ்காரம்	15
3.	காலடி கும்பாபிஷேகம் ...	30
4.	காலடி ஸ்தாபனங்கள்	47

முகவுரை.

"சிருங்கேரி மஹிமை" என்று ஒரு சிறிய புஸ்தகம் வெளியிட்டதிலிருந்து காலடி மஹிமையைப்பற்றியும் எழுதி வெளியிட வேண்டுமென்று சிலர் அபேக்ஷித்ததற்கு இணங்கி இது எழுதப்பட்டிருக்கிறது. இதில் கண்ட அநேக விஷயங்கள் சிருங்கேரி ஸ்ரீமடம் ஸர்வாதிகாரியாயிருந்த ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் எழுதிய "ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளின் சரித்திர"த்தைத் தழுவியே எழுதப்பட்டிருக்கின்றன. தத்காலம் காலடி வேதாந்த பாடசாலை அத்யாபகரான ஸ்ரீ கிருஷ்ண சாஸ்திரிகள் மூலமாய் கிடைத்த சில விஷயங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இவர்களுக்கும் மற்றும் விஷயதானம் செய்து உதவின நண்பர்களுக்கும் என் விசேஷ நன்றி உரித்தானது. இதில் சேர்க்கக்கூடிய விஷயங்கள் இன்னும் பலவிருக்கும். அவைகளை வாசகர்கள் எடுத்துச்சொல்வார்களேயானால் அடுத்த பிரசுரத்தில் சேர்த்துக்கொள்ள ஸௌகர்யமாயிருக்கும்.

R. கிருஷ்ணஸ்வாமி அய்யர்.



காலடி ஸ்ரீ சங்கர பகவத்பாதாசார்யார் மூர்த்தி.

॥ ॐ श्रीगुरुभ्यो नमः ॥

காலடி க்ஷேத்திர மஹிமை

அத்யாயம் 1.

பூர்வ சரிதம்

வைதிக தர்மமென்பது அனாதிஸித்தமாயும் நித்யமாயுமுள்ள வேதத்தையே பிரமாணமாக வுடையதானதினால் அதற்கு எக்காலத்திலும் அழிவு ஏற்படக்கூடியதில்லையென்பது வாஸ்தவம். ஆனாலும் அதை அனுஷ்டிக்கிற ஜனங்களுடைய பாபமிகுதியினாலும் சிரத்தைக் குறைவினாலும் அந்த தர்மமே நசித்து விடும் போல்த்தோன்றும் சில ஸமயங்கள் ஏற்படுவதும் ஸஹஜம். அந்த தர்மத்தைப் பாதுகாக்க பகவானே நேரில் அவதாரம் செய்யும்படி அவசிய மேற்படும் காலத்தில் கூட தர்மத்திற்கு "ग्लानिः" (வாட்டம்) என்றே கூறுகிறார்கள். ஆகையால் ஸநாதந தர்ம மார்க்கத்திற்கு ஒருநாளும் நாசம் ஏற்படாதென்பது உறுதியாயிருந்தும் மிகவும் மங்கிப்போனதாகத் தோன்றும் காலங்கள் ஏற்படுமென்று தெரிகிறது. அந்த ஸமயங்களின் அவசியத்திற்குத் தக்கபடி பகவானே நேரிலோ அல்லது அவர் அம்சபூதர்களான மஹான்களோ அவதரித்து மறுபடியும் இவ்வுலகத்தில் தர்மத்தை நன்கு நிலைநாட்டிச் செழிக்கச்செய்வார்கள்.

அவ்விதம் அவதரிக்கத்தக்க புண்யபூமிகளை யும் புண்ய குடும்பங்களையும் அவர்களே தீர் மானித்துக்கொள்வார்கள். வைகுண்டவாஸியான லக்ஷ்மீபதியிடம் தேவர்கள் சென்று ராவணனுல் ஏற்படும் ஹிம்ஸையை நிவர்த்தித்துக் கொடுக்க வேண்டுமென்று பிரார்த்தித்தபோது, தானே பூமி யில் அவதாரம் செய்வதாக வாக்களித்த பின்பு, யாருக்குப் புத்திரனுகப் பிறப்பதென்று ஆலோசிக் கையில், தன்னை புத்திரனுகப் பெறக்கூடிய மஹத் தான புண்யமும் யோக்யதையும் அயோத்யாதி பதியான தசரத மஹாராஜனுக்கே இருப்பதாகத் தீர்மானித்துக் கொண்டு அவரையே பிதாவாக வரித்தார் என்று ஸ்ரீமத்ராமாயணத்தில் சொல்லப் பட்டிருக்கிறது.

पितरं रोचयामास तदा दशरथं नृपम् ॥

[பாலகாண்டம் ஸ 15-30]

அப்படியே கலியுகத்தில் பௌத்தர் ஜைனர் முதலான அவைதிக மதங்களினுல் நம் புண்ய பூமியான பரத கண்டம் வியாபிக்கப்பட்டு, மறு படியும் வைதிக மதத்தை நிலைநாட்ட ஸ்ரீஸுப்ரஹ் மண்யரையே குமாரில பட்டராக அவதரிக்கும்படி ஏவியும், அவர் கர்மகாண்டத்தை மாத்திரம் ஸ்தாபித்ததால் ஞானமார்க்கம் தன் உன்னத நிலையை அடையாமலிருக்கக் கண்டு, தானே அவ தாரம் செய்வதாக கைலாஸவாஸியான பரமேசு வரனுக்கு ஸங்கல்பம் தோன்றியது. அதற்கு வெகுநாள் முன்னதாகவே கேரள தேசத்தில்

விருஷபாசலம் என்ற பிரதேசத்தில், தான் ஸ்வயம்புலிங்கரூபமாக ஆவிர்பவித்து அந்நாட்டை பரிசுத்தப் படுத்திக்கொண்டு வந்ததுடன், அந்நாட்டு அரசனுன ராஜசேகரன் என்பவனுக்கு ஸ்வப்னத்தில் தரிசனம் கொடுத்து, அவன் மூலமாய் கட்டப்பட்ட கோயிலில் விசேஷ ஸாந்நித்யமடைந்து, ஜனங்களை அனுக்ரஹித்து வந்தார். அப்பிரதேசமே தன் அவதாரத்திற்கு யோக்யமானதென்று ஸங்கல்பம் செய்தார். அந்த பிரதேசத்திலும் பச்சிம வாஹிநியாக பிரவஹிக்கும் பூர்ணநதி (சூர்ணிப்பிழை என்ற பெயராலும் வியவஹரிப்பதுண்டு) யின் கரையில் விளங்கும் காலடியென்று பிரஸித்தி பெற்றிருந்த பெரிய அழகான அக்ரஹாரமே சிலாக்யமென்று தீர்மானித்தார். அங்கேயும் ஆஸ்திகர்களாக பரிசுத்தர்களாக பல குடும்பங்கள் இருந்ததில் அவர்களில் ஸ்திரமான புத்தியுடன் தர்ம மார்க்கத்திலிருந்து கொஞ்சமேனும் வழுவாமல் பிரஸித்தி பெற்ற தன் பெயருக்கு அனுகுணமாக ஸகலவித்தியாபாரங்கதராக சோபித்து வந்த **வித்யாதிராஜர்** என்ற நம்பூதிரி பிராஹ்மணரின் புத்திரரான **சிவகுருவே** தனக்கு பிதாவாக ஏற்பட வேண்டுமென்று நினைத்தார்.

ततो महेशः किल केरलेषु श्रीमद्वृषाद्रौ करुणासमुद्रः ।
पूर्णानदीपुण्यतटे स्वयंभूलिङ्गात्मनाऽनङ्घगाविरासीत् ॥
तच्चोदितः कश्चन राजशेखरः स्वप्ने सुहुर्दृष्टतदीयवैभवः ।
प्रासादमेकं परिकल्प्य सुप्रभं प्रावर्तयत्तस्य समर्हणं विभोः ॥

तस्येश्वरस्य प्रणतार्तिहर्तुः प्रसादतः प्राप्तनिरीतिभावः ।
कश्चित्तदभ्याशगतोऽग्रहारः कालट्यभिख्योऽस्ति
महान्मनोज्ञः ॥

कश्चिद्द्विपश्चिदिह निश्चलधीर्विरेजे
विद्याधिराज इति विश्रुतनामधेयः ।
रुद्रो वृषाद्रिनिलयोऽवतरीतुकामो
यत्पुत्रमात्मपितरं समरोचयत्सः ॥

[ஸ்ரீசங்கர திக்விஜயம் ஸ 2–சு. 1–4]

அந்த ஸமயம் அந்த சிவகுருவுக்கு ரூபம், வித்யை, தனம் முதலிய எல்லா ஸம்பத்துக்களும் இருந்தும்கூட ஸந்தானமேற்படாத குறையால் விருஷபாத்ரிநாதரை பக்தியுடன் பஜித்து வர, அவருக்கு அனுக்ரஹம் செய்வதை நிமித்தமாகக் கொண்டு அவருக்கு புத்திரராக அவதரித்தார்.

காலடிக்கு ஐந்தாறு மைல் தூரத்திலுள்ள மலேயாத்தூர் என்கிற இடம் பூர்ண நதிக்கு ஸமீபத்திலிருப்பதாலும், அங்கே ஒரு சிவாலயம் இருந்து கிருஸ்துவர்களால் வியாபிக்கப்பட்டு எடுபட்டுப் போனதாக ஒரு பிரஸித்தியிருப்பதாலும், இப்பொழுதும் சில ஹிந்துக்கள் அங்குள்ள கிருஸ்துவ பள்ளிக்கு பிரார்த்தனை செய்து வருவதாலும் அதுவே விருஷபாசலம் என்று சிலர் சொல்கிறார்கள். அது உசிதமாகத் தோன்றவில்லை. காலடியிலிருந்து 30 மைல் தூரத்தில் திருச்சிவப்பேரூர் என்றும் திருச்சூர் என்றும் வழங்கப்படுகிற பிரதான நகரம் இருந்து வருகிறது. அதன் மத்தியிலுள்ள குன்றுபோலுள்ள மேட்டில் பிரஸித்தமான

சிவாலயம் இருந்து வருகிறது. அங்குள்ள பகவானுக்கு பொது ஜனங்கள் "வடக்குநாதர்" என்று பெயரிட்டிருந்தபோதிலும் அவருடைய சரியான பெயர் "இடவக்குன்றுநாதர்" என்பதேயாகும். இந்தப்பெயருக்கு ஸம்ஸ்கிருதத்தில் "விருஷபாசலேசுவரர்" என்றே ஏற்படுவதால் அந்த ஸ்தலம் தான் சிவகுரு பஜனம் இருந்து அனுக்கிரஹம் பெற்ற க்ஷேத்திரம் என்று நன்கு தெரிகிறது. காவேரிநதி பாயும் சோழ தேசத்தில் காவேரியிலிருந்து வெகு தூரத்தில் வஸிக்கும் ஜனங்களும் தாங்கள் காவேரி தீரம் என்று சொல்லிக்கொள்வது போல் அவ்வூரும் பூர்ணுநதி தீரம் என்று சொல்வது அனுசிதமாகாது என்று நினைத்து ஸ்ரீ சங்கர விஜயத்தில் வர்ணித்திருப்பதாகத் தெரிகிறது.

காலடியில் பகவான் ஸ்ரீ சங்கர பகவத் பாத ரூபமாக அவதரித்து தன் பாத தூளிகளினுல் அந்த பரிசுத்தமான பிரதேசத்தை மேலும் பவித்திரமாகச் செய்தார். தன்னுடைய பாலலீலைகளினுல் பெற்றோர்களையும் கிராம வாஸிகளையும் மிகவும் ஸந்தோஷிப்பித்தார். அவர் பின்னுல் அருளியஸௌந்தர்யலஹரியென்றதேவீஸ்தோத்திரத்தில்

तव स्तन्यं मन्ये धरणिधरकन्ये हृदयतः
पयःपारावारः परिवहति सारस्वत इव ।
दयावत्या दत्तं द्रविडशिशुरास्वाद्य तव यत्
कवीनां प्रौढानामजनि कमनीयः कवयिता ॥

என்ற 75வது சுலோகத்தில் அம்பிகையின் ஸ்தன்ய பானத்தினால் "திரவிடசிசு" பெரிய கவியாக ஆனதாகக் கண்டிருக்கிறது. இது திருஞானஸம்பந்தரின் விருத்தாந்தத்தைச் சொல்வதாகச் சொல்வார்கள். இதற்கு வியாக்யானம் செய்த லக்ஷ்மீதரர் "द्रविडशिशुः द्रविडजातिसमुद्भवः बालः एतत्स्तोत्रकर्ता" என்று இது ஸ்ரீ சங்கர பகவத்பாதரையே குறிப்பிடுவதாகச் சொல்கிறார்.

கைவல்யாசிரமர் எழுதியிருக்கும் ஸௌபாக்ய வர்த்தனீ என்ற வியாக்யானத்தில் இவ்விஷயம் விஸ்தரிக்கப்பட்டிருக்கிறது. சிவகுரு தன்னூருக்கு சமீபத்திலுள்ள ஒரு அம்பிகை ஆலயத்திற்குப் போய் அபிஷேகாதிகள் செய்துவிட்டு பால் நிவேதனம் செய்த பிறகு பிரஸாதமாக தன்னுடன் வந்திருக்கும் குழந்தை சங்கருக்கு கொஞ்சம் பால் கொடுப்பது வழக்கம். ஒருநாள் அவர் அயலூருக்குப்போகும் சமயம் தன் பத்தினி ஆர்யாம்பாளை இந்த கைங்கர்யத்தைச் செய்யும்படி சொல்லிவிட்டுப்போக, அவளும் வீட்டுக்கு விலக்காக ஏற்பட, குழந்தையையே போய் பால் நிவேதனம் செய்துவரும்படி அவள் சொன்னாள். குழந்தை அம்பிகையின் முன்னால் பாலை வைத்து பருகும்படி எவ்வளவு கேட்டும் அவள் பருகாமல், பால் அப்படியே யிருக்கக்கண்டு அழத்தொடங்கிற்று. அதன் மேல் கருணைகொண்ட தேவி பாலை எடுத்து சாப்பிட்டுவிட்டு, வெறும் பாத்திரத்தை கீழே வைத்தாள். தனக்கு அருந்த பால் கொஞ்சமேனும்

மிஞ்சாதது கண்டு, மறுபடியும் குழந்தை அழ ஆரம்பித்தவுடன், தேவி அவரைத் தன் மடியில் வைத்துக்கொண்டு ஸ்தன்ய பானம் செய்து வைத்தாள். அந்த க்ஷணமே அவருக்கு எல்லா வித்யைகளும் பிரகாசித்தன.


இதையே காமேசுவரஸூரி என்பவர் 'அருண போதினீ' என்ற வியாக்யானத்தில் கண்டிருப்பதுடன், "ஒருநாள் பிதா சிவகுரு தரித்திரனைபடியால் பிக்ஷைக்கு வெளியில் போயிருந்தார். தாயார் ஜலம் கொண்டுவர நதிக்குப்போயிருந்தாள். தாரித்ர்ய தசையினால் வீட்டில் வேலைக்காரர்களும் கிடையாது. சங்கரர் ஆறு மாதத்துக் குழந்தை. பசியினால் பீடிக்கப்பட்டு புறண்டு புறண்டு அழுதது. அந்த ஸமயம் ஆகாயமார்க்கமாய் பரம சிவனுடன் போய்க்கொண்டிருந்த பார்வதிக்கு தயை ஏற்பட்டு கீழே இறங்கி வந்து குழந்தையை தடவிக்கொடுத்து கண்ணைத்துடைத்து கையில் எடுத்து ஸ்தன்யம் கொடுத்தாள், அப்பொழுதே காவ்யங்கள், சாஸ்திரங்கள் எல்லாம் அவருக்கு பிரத்யக்ஷமாகி விட்டன. இவ்விதம் காஞ்சி தேசத்தவர்கள் சொல்கிறார்கள்" என்றும் எழுதியிருக்கிறார். சங்கர விஜயத்திலிருந்து சிவகுரு தனிகர் என்று தெரிவதால் இக்கதை பொறுத்தமாக தெரியவில்லை. தவிரவும் காலடிக்கு ஒரு மைல் தூரத்தில் காத்யாயனி அம்மன் கோவில் ஒன்று இருக்கிறது. அந்த அம்பிகைதான் முன் சொன்னபடி அனுக்ரஹித்தாள் என்ற வதந்தியும் இருந்து வருகிறது.

சங்கர பகவத்பாதரின் மூன்ருவது வயதி லேயே தகப்பனுர் பரலோகம் போய்விட்டபடி யால் தாயாரே பந்துக்களின் உதவியைக்கொண்டு இவருக்கு ஐந்தாவது வயதில் உபநயனம் செய் வித்து தகுந்த குருவைத்தேடி வித்யாப்யாஸம் செய்வித்தாள். பிரஹ்மசர்யாசிரம விதிப்படி பிக்ஷையெடுத்துவரும் சமயம் தனக்கு பிக்ஷையிட சக்தியற்று தவித்த ஒரு பெண்மணியிடம் கருணை யேற்பட்டு மஹாலக்ஷ்மியை "கனகதாரா ஸ்தோத் திரம்" என்ற சுலோகங்களால் ஸ்துதித்து தங்க நெல்லிக்காயாக வர்ஷிக்கச்செய்து அனுக்ரஹித் தார். இவ்விதம் இம்மஹானின் கருணைக்கு பாத் திரமான குடும்பத்தார் இன்னும் ஐசுவர்யவந்தர் களாக காலடிக்கு ஸமீபத்தில் "ஸ்வர்ணத்து மனைக்கல்" என்ற பெயருடன் பிரஸித்தமாக இருந்து வருகிருர்கள்.

आकर्ण्य दीनगृहिणीवचनं कृपार्द्रः
स्वर्णात्मकामलकसंततिमासमन्तात् ।
गेहस्य योऽतितरसा हि ववर्ष स त्वं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

(பக்திஸுதா தரங்கிணி, பக்கம் 187)

குருகுலவாஸமாகி கிருஹத்திற்கு திரும்பி வந்து தன் மாதாவையும் மற்றும் பரிஜனங்களை யும் ஸந்தோஷப்படுத்தி வந்த ஸமயம் தன்னு டைய எல்லையற்ற ஞான வைபவத்திஞல் அத் தேசத்து அரசனுகிய ராஜசேகரனையும் மற்றும்



ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதி ஸ்வாமிகள்.



ஸ்ரீமத் ஆசார்யேந்த்ராள் திவான் சேஷாத்திரி அய்யருடன்.

ஸகல வித்வான்களேயும் தன்னிடம் விசேஷ பக்தியுடன் ஈடுபடும்படி செய்துவந்தார்.

ஆர்யாம்பாளுக்கு இவ்வுத்தம புத்திரனைக் கொடுத்து அனுக்ரஹித்த விருஷபாசலேசுவரரை அடிக்கடி தர்சனம் செய்ய நினைத்தும் சரீரத்தில் பலக்குறைவினால் ஸாத்தியப்படாமல் போன ஸமயம் அவள் ஒருநாள் மிகவும் வருந்தி பகவானை ஸ்மரித்துக் கொண்டே நித்திரையில் அமர்ந்த போது பகவான் ஸ்வப்னத்தில் தோன்றி "நாளை காலையில் வெள்ளை மான் ரூபமாக உன் வீட்டுக்கு ஸமீபத்தில் விளையாடிக் கொண்டிருப்பேன். என்னைத்துயர்ந்து வந்தால் ஒரு மேடான இடத்தில் நான் மறைந்தவுடன் அங்கே ஸ்வயம்புவாக ஒரு லிங்கம் தென்படும். அதே நான் என்று பிரதி தினம் தரிசனம் செய்து வா" என்று சொன்னார். அப்படியே மறுநாள் காலையில் வெள்ளை மானாகத் தோன்றி ஒரு மேட்டின் பேரில் மறைந்தவிடத்தில் லிங்கம் காணப்பட்டது. அதையே விருஷபாசலேசுவரர் என்று பாவித்து சிறு கோவிலும் கட்டப்பட்டு இன்னமும் இருந்து வருகிறது. அந்த மூர்த்திக்கு "திருவெள்ளை மான் துள்ளி" என்ற பிரஸித்தியும் இருந்து வருகிறது.

அக்காலத்தில் பூர்ணநதி காலடி கிராமத்திலிருந்து சுமார் இரண்டு மைல் தூரத்திலிருந்தது. ஒரு நாள் தாயார் நதியில் ஸ்நாநம் செய்து திரும்பும் ஸமயம் வெய்யிலினால் பீடிக்கப்பட்டு வீடு வந்துசேர தாமஸப்பட்டது. இதையறிந்த

பகவத் பாதர் நதியை பிரார்த்தித்து தன் கிருஹத்திற்குப் பக்கத்திலேயே பிரவஹிக்கும்படி செய்தார். இப்பொழுது காலடியிலுள்ள பூர்ணு நதிக்கு தெற்கே பெரும்பாவூர் போகும் வழியில் முன் நதி பிரவஹித்திருந்த பள்ளம் இன்னமும் காணப்படுகிறது

आनेष्ट दूरगनदीं जननीहिताय
यो बाल्य एव जगतां हितकृत्स्वभावः।
स त्वं समस्तजनरक्षणबद्धदीक्ष
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

[பத்திஸுதாதரங்கிணி 187]

இவ்விதம் ஸ்ரீசங்கரர் எட்டாவது வயது வரை காலடியில் வஸித்து வருகையில், தன் அவதாரத்தின் முக்கிய உத்தேசமான ஞானமார்க்க ஸ்தாபனத்தைச் செய்ய ஸன்யாஸாசிரமம் கைக்கொள்ள நினைத்தார் அதற்கு தாயார் அனுமதி கொடுக்காமலிருக்கையில் ஒரு நாள் நதியில் ஸ்நானம் செய்யும்போது ஒரு முதலை தன் காலைப் பிடிக்க, தன் நிலையை கரையிலிருந்த தாயாருக்குத் தெரிவித்து ஆபத்ஸன்யாஸம் வாங்கிக்கொள்ள அனுமதிகேட்க, அவளும் கொடுக்க, இவர் பிரேஷோச்சாரணம் செய்து மனதால் ஸங்யாஸம் செய்துகொள்ள, முதலையும் காலை விட்டு விட, கரையேறிவந்து, தாயாரை ஸமாதானப்படுத்தி அவளுடைய அந்த்ய காலத்தில் தானே வந்து உதவுவதாக வாக்களித்துவிட்டு, குருவைத்தேடி வடதேசம் புறப்பட்டார். ஏற்கனவே தாயாருக்

காக பூர்ணு நதியை ஸமீபத்தில் கொண்டு வந்ததினுல் அதன் கரையிலுள்ள கிருஷ்ணர் கோவிலுக்கு நதீப்ரவாஹத்தால் இடைஞ்சலேற்படவே அந்த பகவன் மூர்த்தியையும் அங்கிருந்து எடுத்து தன் கிருஹத்திற்கு ஸமீபத்திலேயே பிரதிஷ்டை செய்துவிட்டு ஊரை விட்டுப் புறப்படும்படி ஏற்பட்டது. அக் கிருஷ்ணன் கோவில் இன்றும் நன்ருக பரிபாலிக்கப்பட்டு விளங்கி வருகிறது.

ஸ்ரீசங்கரர் உத்தரதேசம் சென்று, நர்மதா நதீதீரத்தில் ஸ்ரீகோவிந்த பகவத்பாதரிடம் உபதேசம் பெற்று க்ரம ஸந்யாஸமடைந்து காசிக்குச்சென்று ப்ரஸ்தான த்ரய பாஷ்யாதிகளை எழுதிப் பிரசாரம் செய்து வந்து, கொஞ்ச நாள் சென்று சிஷ்யர்களுடன் சென்று சிருங்கேரியில் தங்கியிருக்கும் ஸமயம் தன் தாயார் தன்னை நினைப்பதாகத் தெரிந்து, உடனே ஆகாச மார்க்கமாக மறுபடியும் காலடி வந்து சேர்ந்தார். அங்கே தாயாரின் அந்த்ய காலத்தில் கூடவேயிருந்து அவளுடைய அபிப்பிராயப்படி அவளை வைகுண்டத்திற்கு அனுப்பியபின் அவள் சரீரத்திற்கு அக்னி ஸம்ஸ்காரம் செய்ய யத்தனித்ததில் பந்துக்கள் உதவ மறுத்தார்கள். தன் வீட்டு பின் பக்கத்திலேயே சிதையை அடுக்கி வலது கையில் அக்னியை உண்டு பண்ணி ஸம்ஸ்காரத்தை நடத்திஞர். இவ் விஷயத்தில் பந்துக்கள் நடந்து கொண்ட மாதிரியில் பகவத் பாதருக்குக் கோபம் ஏற்பட்டு அவர்களை சபித்தார். "இனி உங்களுக்கு வேதாத்யயனம் இல்லாமல் போகட்டும். உங்கள் கிரஹங்

களில் ஸன்யாஸிகள் பிக்ஷை செய்யமாட்டார்கள். உங்களுக்கு இனி ருத்ரபூமி அவரவர்கள் கிரஹத்திலேயே இருக்கவேண்டியது'' என்று ஏற்பாடு செய்துவிட்டார்.

संचित्य काष्ठानि सुशुष्कवन्ति
गृहोपकण्ठे धृततोयपात्रः ।
स दक्षिणे दोष्णि ममन्थ वन्हिं
ददाह तां तेन च संयतात्मा ॥
न याचिता वन्हिमदुर्यदस्मै
शशाप तान् स्वीयजनान् सरोष:
इतः परं वेदबहिष्कृतास्ते
द्विजा यतीनां न भवेच्च भिक्षा ॥
गृहोपकण्ठेषु च वः श्मशान-
मद्यप्रभृत्यस्त्विति तान् शशाप ॥

[சங்கர திக்விஜயம் ஸ 14, சு. 48-50.]

பிற்பாடு அத்தேசத்து அரசனை ராஜசேகரனைப் பார்க்கும்போது தான் செய்த இந்த நியமத்தை நடத்திவைக்கும்படி அவனுக்கும் கட்டளையிட்டார்.

नृप कालटिनामकाग्रहारा
द्विजकर्मानधिकारिणोऽद्य शप्ताः ।
भवताऽपि तथैव ते विधेया
बत पापा इति देशिकोऽशिषत्तम् ॥

[சங்கர திக்விஜயம் ஸ. 14, சு. 174]

இந்த நியமத்தின்படியே இன்னமும் அனுஷ்டானமிருந்து வருகிறது,

अद्यापि तद्देशभवा न वेद-
मधीयते नो यमिनां च भिक्षा ॥
तदाप्रभृत्येव गृहोपकण्ठे-
ष्वासीच्छ्मशानं किल हन्त तेषाम् ॥

[சங்கர திக்விஜயம் 14, 50-51.]

அது முதல் அவ்வூரே சாபக்ரஸ்தம் என்ற பெயரினுல் ஸாது ஜனங்களால் பஹிஷ்கரிக்கப் பட்டு காலாந்தரத்தில் அக்ரஹாரம் இருந்தவிடமே தெரியாமல் போய்விட்டது. ஆனுலும் ஆர்யாம் பாளுக்கு ஸம்ஸ்காரம் செய்த விடத்தை மிக பரி சுத்தமான ஸ்தலமாக பாவித்து ஜனங்கள் பரிபா லித்து வந்திருக்கிறுர்கள். அப்படியே ஸம்ஸ் காரம் செய்த பிறகு ஆசார்யார் ஸ்நாநம் செய்த நதி கட்டத்தை புண்யகட்டமாக பாவித்து அமா வாஸ்யை, ஸங்கிரமணம் முதலான புண்ய தினங் களில் ஜனங்கள் அங்கே போய் ஸ்நாநம் செய்து வரவாரம்பித்தார்கள். இன்னமும் அந்தப் பக்கத் தில் மேலே கண்ட ஆசாரங்களுடன் வேதாத்யய னம் இல்லாமல் "ஓதில்லா நம்பூரிகள்" என்ற ஒரு வகுப்பார் இருந்து வருகிறுர்கள். அக்காலத்தில் காலடியில் பத்து நம்பூதிரி குடும்பங்கள் இருந்த தாகவும் அவர்களில் இரண்டு குடும்பஸ்தர்கள் மாத்திரம் ஆசார்யாருக்கு உதவியாயிருந்து அவர் தாயாரை சிதைக்குக் கொண்டுபோய் வைப் பதில் தலைப்பக்கம் ஒரு குடும்பத்தாரும் கால் பக்கம் ஒரு குடும்பத்தாரும் தூக்கினதாகவும் அதினுல் அவர்கள் இந்த சாபத்திற்கு உள்பட வில்லை யென்றும் சொல்கிறுர்கள். அவ்விரு

குடும்பங்களுக்கும்முறையே"தலையாற்றுப்பள்ளி" "காப்பள்ளி" யென்று பெயர் ஏற்பட்டு இன்னம் காலடிக்கு ஸமீபத்தில் இருந்து வருகிறார்கள். இவர்களுடைய ஆதீனத்திலும் அத்வைத ஸம்பிரதாயத்தைச் சேரந்த தெற்கே மடம் என்ற நம்பூதிரி ஸ்வாமிகளின் ஆதீனத்திலும் தான் மேலே கண்ட கிருஷ்ணன் கோவிலும் ஆர்யாம்பாள் தஹன ஸ்தலமும் பக்கத்திலுள்ள இடங்களும் இருந்து வந்திருக்கின்றன.

இவ்விதம் காலடிக்கு ஏற்பட்ட சாபத்தை வேறு யாராலும் நிவர்த்தி செய்ய முடியாததினுல் பகவத்பாதரின் சிஷ்ய பரம்பரையில் 33வது பட்டமாக, அவருடைய அவதாரமென்றே பிரஸித்தி பெற்ற. **சிருங்கேரி ஜகத்குரு ஸ்ரீ ஸச்சிதானந்த சிவாபிநவ நரஸிம்ஹபாரதி ஸ்வாமிகளவர்கள்** அங்கு நேரில் விஜயம்செய்து ஸ்தலத்தை பரிஷ்காரம் செய்து ஸ்ரீசங்கர பகவத்பாதருக்கும் சாரதாம்பாளுக்கும் ஆலயம் நிர்மாணம் செய்து கொடுத்து சாப விமோசனம் செய்துவைத்தார்கள். அது முதல் காலடி விசேஷ சோபையுடன் விளங்கி வருகிறது.

அத்தியாயம் 2

காலடி பரிஷ்காரம்


இப்பொழுது நம் நாடெங்கும் விசேஷமாகக் கொண்டாடப்பட்டு வருகிற ஸ்ரீசங்கர ஜயந்தி உத்ஸவமானது முன் காலத்தில் மடத்திலுள்ள ஆசார்யமூர்த்திக்கு மாத்திரம் ஸங்கிரஹமாக நடந்து கொண்டு வந்தது. சிருங்கேரி பீடாதிபத்யம் வஹித்து வந்த ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதீ ஸ்வாமிகளவர்கள் தான் தன் யாத்திரைகளில் நாம் ஆசார்யாளிடம் கிருதக்ஞதை காட்டவேண்டியதர்காகவாவது அம்மஹானின் ஜன்மதினத்தை கொண்டாட வேண்டுமென்று வற்புறுத்தி வந்தார்கள். சிருங்கேரியில் ஸ்ரீசாரதாம்பாள் ஆலயம் போலவே ஆசார்யாளுக்கும் பிரத்யேகமாக ஆலயம் கட்டி நித்ய நைமித்திகாதி பூஜைகள் சாசுவதமாக நடந்து வரும்படி ஏற்பாடு செய்ய எண்ணங்கொண்டார்கள். அத்துடன் ஸ்ரீமத் ஆசார்யாளுடைய ஜன்மபூமியைக் கண்டுபிடித்து சீர்படுத்தி அங்கேயே ஒரு தேவாலயம் நிர்மாணம் செய்து நித்ய பூஜாதிகள் விசேஷமாக நடந்து வரும்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்றும் ஸங்கல்பித்தார்கள்.

இந்த ஸங்கல்பம் வர வர உறுதிப்பட்டுக் கொண்டிருக்கையில் மைஸூர் ஸமஸ்தானத்தில் திவானயிருந்த ஸர் கே. சேஷாத்திரி அய்யர் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களை தர்சிக்க சிருங்கேரிக்கு 1894ல்

வந்து சேர்ந்தார். அவர் மலையாள தேசத்தைச் சேர்ந்தவராக இருந்ததுடன் கார்யநிர்வாஹத்தில் மிகவும் ஸமர்த்தராக விருந்தபடியால் அவரிடம் தன் ஸங்கல்பத்தைப்பற்றி ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் பிரஸ்தாபித்தவுடனேயே அவர் மிகவும் குதூஹலத்துடன் தன்னுலாகக் கூடிய உதவியைச் செய்து கொடுப்பதாக ஏற்றுக்கொண்டார். அப்பொழுது ஸ்ரீமடத்தில் ஸர்வாதிகாரியாக இருந்த ஸ்ரீகண்ட சாஸ்திரிகள் உடனே சேஷாத்திரி அய்யரின் உதவியின் பேரில் மலையாளப்பிரதேசம் சென்று விசாரிக்கலாயினர். காலடி என்பது திருவாங்கூர் ஸமஸ்தானத்தைச் சேர்ந்த கோட்டயம் டிவிஷன் குன்னத்துநாடு தாலூகாவில் ஒரு பாகம் என்று தெரிந்தது. திருவனந்தபுரம் ஸமஸ்தானத்து அதிகாரிகளுடைய ஸஹாயத்துடன் காலடிக்கே வந்து பார்க்கையில் ஸ்ரீசங்கர விஜயத்தில் சொல்லியிருக்கிற அநேக அடையாளங்கள் பிரத்யக்ஷமாக தென்பட்டன. ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாரின் தாயாரான ஆர்யாம்பாளுக்கு அவர் அந்திய ஸம்ஸ்காரம் செய்த இடம் வெகு பரிசுத்தமான ஸ்தலம் என்று பாவித்து அங்கு ஸமீபத்திலுள்ள அத்வைத மத ஸம்பிரதாயத்தைச் சேர்ந்த தெற்கே மடம் என்ற ஸ்தாபனத்தின் அதிபதிகளும் மற்றவர்களும் அங்கே தொன்று தொட்டு தீபம் போட்டுக் கொண்டு வந்திருந்தார்கள். அவ்விடம் தர்சனத்திற்குப் போகிறவர்கள் அங்குள்ள பூமியைத் தொட்டு மிருத்திகையை ரக்ஷையாக தரித்து வந்தார்கள். ஸ்வர்ண நெல்லிக்காயாக



ஸ்ரீமத் ஆசார்யேந்த்ராள் திவான் மாதவராயருடன்.



ஸ்ரீமத் ஆசார்யேந்த்ராள்
ஸர்வாதிகாரி ஸ்ரீகண்ட சாஸ்திரிகளுடன்.

வர்ஷித்த குடும்பத்தைச் சேர்ந்தவர்களென்று ஸமீபத்தில் "ஸ்வர்ணத்து மனைக்கல்" என்றதோர் குடும்பம் இன்னமும் பிரஸித்தமாக இருந்தது. ஸ்ரீமத் ஆசார்யாளின் சாபத்திற்குக் கட்டுப்பட்டு வேதாத்யயனம் இல்லாமலும் ஸன்யாஸிகளின் பிக்ஷைக்கு அர்ஹதையில்லாமலும் தங்கள் தோட்டத்திலேயே மயானம் வைத்துக்கொண்டும் சில நம்பூதிரி குடும்பங்கள் இருந்தன. இது முதலான விஷயங்களையெல்லாம் நன்கு விசாரித்து தெரிந்துகொண்டு சேஷாத்திரி அய்யரும் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் சிருங்கேரியில் ஸ்ரீஸ்வாமிகளவர்களிடம் தெரிவித்தார்கள்,

ஆனல் அந்த ஸமயம் ஸ்ரீஸ்வாமிகளுக்கு அந்தர்முக விருத்தி ஜாஸ்தியாகிக் கொண்டு வந்தபடியால் உடனே ஆலயநிர்மாணத்திற்குவேண்டிய வெளிப்பிரவிருத்தியில் நோங்கவில்லை. அந்த ஸ்தலத்தின் மஹிமையை மாத்திரம் ஜனங்களுக்கு நன்ருகத்தெரியும்படிச்செய்ய உத்தேசித்தார்கள். அதற்கு அனுகுணமாக ஸ்ரீஸ்வாமிகளின் பக்தர்களில் மிகவும் முக்கியமானவரும் பிரஹ்மவித்யா என்ற பத்திரிகை மூலம் விசேஷமாக தர்மப்பிரசாரம் செய்து வந்தவரும் ஞானத்திஞலும் அனுஷ்டானத்திஞலும் மிகவும் பிரஸித்தியடைந்தவருமான நடுக்காவேரி பிரஹ்மஸ்ரீ பரஸமய பஞ்சாநந ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள் என்பவரை பிரதி வருஷமும் காலடிக்கு அனுப்பி ஆசார்யாள் அவதார தினமான வைசாக சுத்த பஞ்சமி தினத்தில் பக்கங்

களிலுள்ள சிஷ்யர்களைச் சேர்த்துக் கொண்டு விசேஷமாக பூஜை, பிராஹ்மண ஸந்தர்ப்பணம், உபன்யாஸம் முதலியன செய்து ஜன்மோத்ஸவத்தை விமர்சையாக அந்த ஸ்தலத்திலேயே நடத்தி வரும்படி ஏற்பாடு செய்தார்கள். அவ்விதமே அவர் மிகவும் சிரத்தையுடனும் உத்ஸாகத்துடனும் இந்த ஆசார்ய ஸேவையை ஏற்றுக்கொண்டு பிரதி வருஷமும் நடத்திக்கொண்டு வந்ததுடன், தான் போகுமிடங்களில் காலடியின் மஹிமையைப்பற்றி சிஷ்யர்களுக்குத் தெரியும்படி செய்து வந்தார். காலடியை தர்சனம் செய்ததில் தனக்கேற்பட்ட ஸந்தோஷத்தையும் பாக்கியத்தையும் விளக்கி

अद्राक्षं भाग्ययोगादमृतकरकलाकोलदंष्ट्रावतंस -
श्रीसूर्येशावतारस्फुटविमलयशःपूर्णदिक्चक्रवालम् ।
पुष्यद्भासन्तिकश्रीतटतरुकुसुमाक्षीणसौगन्ध्यवेणी -
चूर्णीभङ्गानुषङ्गामलशिशिरतलं कालटिक्षेत्रवर्यम् ॥ *

என்று ஆரம்பித்து "ஜகத்குருநாம ஸேவா சதகம்" என்று நூறு சுலோகங்கள் இயற்றியிருக்கிறார். அவருக்கும் அந்த க்ஷேத்திரத்தை கூடிய சீக்கிரம் ஸ்வாதீனம் செய்து அங்கே ஆசார்யாளுக்கு ஆலயம் நிர்மாணம் செய்ய வேண்டுமென்ற அவா மேலிட்டுவந்தது, ஆனால் அப்பிரதேசத்தில் அன்னிய மதஸ்தர்களால் பக்கத்திலுள்ள

---

* குறிப்பு:— இது ஸ்ரீரங்கம் ஸ்ரீ சங்கர குருகுலத்தில் வெளியிட்ட ஸ்தோத்ர ரத்னமாலையில் இருக்கிறது. விலை ரூ. 1—8—0. இதன் ஒவ்வொரு சுலோகமும் "अद्राक्षं भाग्ययोगात्" என்று ஆரம்பமாகும்.

இடங்கள் வியாபிக்கப்பட்டிருந்தபடியால் அந்த ஸ்தலத்தை வேண்டிய விஸ்தீர்ணத்திற்கு ஸ்வாதீனப்படுத்திக் கொள்வது ஸுலபமான கார்யமாகத் தோன்றவில்லை. இப்படியிருக்கையில் தைவ கதியால் இவ்விஷயத்தில் மிகவும் ஊக்கம் கொண்ட சேஷாத்திரி அய்யரும் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளும் காலம் சென்றுவிட்டபடியால் உடனே ஏற்பாடு செய்வதும் தடைப்பட்டது. இவ்விதம் பதிணுரு வருஷங்கள் சென்றுவிட்டன.

அதன் பிறகு மைசூர் ராஜ்யத்தில் மந்திராலோசனை ஸபையில் அங்கத்தினராயிருந்த V. P. மாதவராவ் என்பவர் திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் திவானுக அமைந்தார். திருவாங்கூர் ஸமஸ்தானத்தில் நியாயாதிபதி ஸ்தானம் வஹித்த பனகுடி A. ராமசந்திரய்யர் என்பவர் மைசூர் ஸமஸ்தானத்தில் ஹை கோர்ட் ஜட்ஜ் பதவியை யடைந்தார். அவர் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களிடம் விசேஷமான பக்தியுடன் ஈடுபட்டவர். அவர் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு ஸ்ரீ மடம் ஸர்வாதிகாரியுடன் திருவனந்தபுரம் போய் V. P. மாதவராயரிடம் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் ஸங்கல்பத்தைத் தெரிவித்தார். காலடியிலுள்ள பூமிகள் தெற்கே மடத்து ஸ்வாமிகளுக்கே பாத்தியப்பட்டிருந்த போதிலும் குடிவார பாத்தியம் இதர ஜனங்களுக்கும், அதிலும் இதர மதஸ்தர்களுக்கும், இருப்பதாக தெரியவந்த படியால் ஸ்வாதீனம் செய்து கொள்வது மிகவும்

சிரமப்படும் என்பது விளங்கிற்று. ஆனால் ஸ்ரீ ஸ்வாமிகள் ஸத்யஸங்கல்பர்களாக இருந்தபடியால் அவருடைய எண்ணம் நிறைவேறுவதற்கு அனுகூலமாக, அந்த ஸமயத்தில் இந்தியா ராஜ பிரதிநிதி ஸ்தானம் வஹித்து வந்த கர்ஸன் பிரபு என்பவர் இந்தியாவில் சரித்திரஸம்பந்தமானதும் மஹா புருஷர்களின் ஞாபகார்த்தமானதும், புராதனமானதும், அல்லது சிற்பத்திறமையில் க்யாதி பெற்றதுமான ஸ்தலங்களையும் கட்டிடங்களையும் ஜாக்கிரதையாக ஸர்க்காரிலிருந்தே காப்பாற்ற வேண்டுமென்று சாஸனம் பிறப்பித்தார். அதை அனுஸரித்து திருவாங்கூர் ஸமஸ்தானத்திலும் சாஸனம் ஏற்பட, அதை அனுஸரித்து காலடி பூமியை திருவாங்கூர் ஸர்க்கார் ஸ்வாதீனப்படுத்திக் கொண்டு எவ்விதமான வில்லங்கங்களையும் விடுவித்து ஸ்ரீ ஸ்வாமிகளவர்களுக்கு ஸமர்ப்பணம் செய்தார்கள். அத்துடன் அந்த ஸ்தலத்தை பரிஷ்காரம் செய்து ஆலயம் கட்டுவதற்காக ஸர்க்காரிலிருந்து தங்கள் உபயமாக ரூ. 10000 (பதினாயிரம்) கொடுக்கும்படி ஏற்பாடு செய்தார்கள்.

இவ்விஷயங்களையெல்லாம் ஸ்ரீ கண்ட சாஸ்திரிகள் சிருங்கேரிக்குப் போய் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களிடம் விக்ஞாபனம் செய்ததின் பேரில் எல்லா கார்யங்களும் சுபமாகவே கை கூடிக்கொண்டு வருகிறபடியால் இனி தாமஸ மன்னியில் தன் ஸங்கல்பத்தை நிறைவேற்ற வேண்டியது அவசிய



மைசூர் மஹாராஜா நால்வடி கிருஷ்ணராஜ உடையார்.



திருவனந்தபுரம் மஹாராஜா குலசேகர ராமவர்மா
மூலம் திருநாள்.

மென்று ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் நிச்சயித்து வழக்கம்போல் ஸ்ரீ சாரதாம்பாள் ஸன்னிதியில் உத்திரவு கேட்டார்கள். அப்படியே யாத்திரைக்கு அனுகூலமாக உத்திரவு கிடைத்தவுடன், மறுபடியும் பாஹ்ய விருத்தியுடன் ஸஞ்சாரம் செய்வதிலும், ஸ்ரீ சாரதாம்பாள் ஸந்நிதியை விட்டும் உபசாந்த ஸ்தலமான சிருங்கேரியை விட்டுப் போகும்படி ஏற்பட்டதிலும், தனக்குள்ள வருத்தத்தை சில உருக்கமான சுலோகங்களால் வெளியிட்டுவிட்டு, அம்பாளின் ஆக்ஞையை அனுஸரித்து பராபவ மாக சுக்ல பஞ்சமீ தினம் (18—1—1907) யாத்திரை புறப்படுவதாகத் தீர்மானித்தார்கள்.

சில தினங்களுக்குள் A. ராமசந்திரய்யர் சிருங்கேரிக்கு வந்தார். காலடி நிர்மாண விஷயத்தில் அவரே பொறுப்பு வஹிக்க வேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமிகள் ஆக்ஞை யிட்டதை உத்ஸாஹமாக ஏற்றுக்கொண்டு ஸ்ரீ ஸ்வாமிகளால் அனுக்ரஹிக்கப்பட்ட யந்த்ரங்கள், விபூதி முதலிய பிரஸாதங்களைப் பெற்றுக்கொண்டு புறப்பட்டார். போகும் வழியில் **மைஸூர் மஹாராஜா நால்வடி கிருஷ்ணராஜ உடையாரிடம்** அவர் தெரிவித்ததின் பேரில், ஸ்ரீ ஸ்வாமிகளை தர்சிக்க மஹாராஜா தன் தாயார், ஸஹோதரர், பார்யை முதலானவர்களுடன் சிருங்கேரிக்கு வந்து, காலடி பிரதிஷ்டையை உத்தேசித்து விஜயம் செய்யும் மார்க்கத்தில் தன் ராஜதானிக்கும் வந்து அனுக்ரஹிக்க வேண்டுமென்று பிரார்த்தித்துவிட்டு மைஸூர் திரும்பினர். அப்


படியே மைஸூர் விஜயம் செய்து விசேஷமான ஸத்காரங்களைப் பெற்று ஸத்யமங்கலம் வழியாக கோயமுத்தூர், திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, ராமநாதபுரம் ஜில்லாக்களில் ஸஞ்சாரம் செய்து ராமேசுவரம் போய்விட்டு மதுரை, திருநெல்வேலி ஜில்லாக்கள் மார்க்கமாக திருவாங்கூர் ஸம்ஸ்தானத்தில் பிரவேசித்தார்கள். அங்கேயும் மஹாராஜா, மூலம் திருநாள் குலசேகர ராமவர்மா அவர்களால் விசேஷமாக ஸத்காரம் செய்யப்பட்டு கிரமமாக காலடிப் பக்கம் யாத்திரை செய்து வந்தார்கள். எங்கும் சிஷ்யகோடிகள் வெகு உத்ஸாஹத்துடன் வரவேற்று காலடி கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய ஸகல விதமான உதவிகளையும் செய்து கொடுத்தார்கள். ஆலயம் கட்டுவதற்கும் கும்பாபிஷேக செலவுக்கும் சிஷ்யர்கள் ஏராளமாக காணிக்கை கொடுத்தபோதிலும் தன் சிஷ்யர்களில் மிகவும் எளியவர்களாக இருக்கும் ஜனங்களின் காணிக்கையும் அப்படியே கும்பாபிஷேக வைதீக தக்ஷிணைக்கு உபயோகப்பட வேண்டுமென்று ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் ஸங்கல்பித்து பிரதி தினம் தீர்த்த காணிக்கையில் விழும் சில்லரைகளை மாற்ருமல் வைத்திருந்து அப்படியே உபயோகப் படுத்த வேண்டுமென்று ஆக்ஞை செய்தார்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காலடி ஸ்தலத்தை பரிஷ்காரம் செய்யவும் தேவாலயம் நிர்மாணம் செய்யவும் A. ராமசந்திரய்யர் பொறுப்பு ஏற்றுக்கொண்டு தனக்கு

ஸஹாயமாக மைஸூர் ஸம்ஸ்தானத்தில் கோசாதி காரியாயிருந்து பென்ஷன் பெற்றவரும் சிற்ப வித்யையில் மிகவும் நிபுணருமான E. R. சுப்ப ராயரை வரவழைத்துக்கொண்டு அவருடைய உதவியினால் ஒவ்வொரு கார்யத்தையும் நன்கு நடத்திக் கொண்டு வந்தார். அந்த ஸ்தலம் பாம்பு முதலிய துஷ்ட ஜந்துக்கள் ஏராளமாக ஸஞ்சாரம் செய்யக் கூடியதாக புல், செடி, புதர்கள் அடர்ந்து காடு போல இருந்தபடியால் பரிஷ்காரம் செய்வதே வெகு சிரம ஸாத்தியமாயிருந்தது. தவிரவும் தேவாலயம் கட்டவேண்டிய இடம் பூர்ணா நதியின் வடகரை. அந்தக் கரையை நன்கு பலமாகக் கட்டாத விஷயத்தில் ஆலயத்திற்கே பலக்குறைவு ஏற்படக்கூடியதால் விசாலமாகவும் உறுதியாகவும் படித்துறை கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அப்படி ஒரு தடவை, இரண்டு தடவை, கட்டினதில் நதியின் வெள்ளம் பெருக்கெடுத்து வந்த ஸமயம் சரிந்துவிட்டது. பிறகு இவ்விஷயத்தை ஸ்ரீ ஸ்வாமிகளவர்களிடம் தெரிவித்து அவர்கள் அநுக்ரஹித்த விபூதிப் பிரஸாதத்தை அஸ்திவாரத்தில் போட்டு கட்டவாரம்பித்த பின் அசைவற்று அப்படியே உறுதியாக நின்றது. ஏராளமாக பொருள் செலவு செய்து முப்பத்திரண்டு படிகளுடன் கட்டப்பட்டு வெகு லக்ஷணமாக அமைந்த இப்படிக்கட்டு இப்பொழுது சோபித்து வருகிறது.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் முதலில் ஸ்ரீமத் சங்கர பகவத்பாதருக்கு மாத்திரம் ஒரு ஆலயம் அமைப்ப

தாக ஸங்கல்பம் செய்தார்கள். பின்னுல், ஆசார்யாளிடம் அவர் தாயார் ஆர்யாம்பாளுக்கு இருந்த விசேஷ வாத்ஸல்யத்தையும், இவருக்கு அவளிடமிருந்த பக்தியையும், ஸன்யாஸத்திற்குப் பிறகு கூட மாதாவைக் காட்டிலும் உயர்ந்த தைவமில்லையென்பதை தன் அனுஷ்டானத்தினுல் காட்டின விஷயத்தையும் கவனிக்கையில் அவருடைய தாயாரின் ஞாபகார்த்தமாகவும் ஒரு ஆலயம் கட்டவேண்டுமென்ற ஸங்கல்பம் தோன்றிற்று. ஆனுல் ஆர்யாம்பா என்ற முறையில் ஆலயம் கட்டுவது ஸம்பிரதாயமில்லை. ஆதி ஆசார்யாள் ஸ்ரீ சாரதாம்பாளையே தன் தாயாராக பாவித்து **भजे शारदाम्बामजस्रं मदम्बाम् ॥** என்று ஸ்துதி செய்திருப்பதால், ஜகன்மாதாவான ஸ்ரீ சாரதாம்பாளுக்கே ஒரு ஆலயம் கட்டுவதென்று தீர்மானித்தார்கள். ஆசார்யாளுடைய தாயாருக்கு ஸம்ஸ்காரம் செய்த ஸ்தலம் என்று பிரஸித்தி யடைந்திருந்த இடத்தில் ஒரு துளசி மடத்தையும் அதன் பக்கத்திலேயே ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தையும் கட்டும்படி உத்திரவு செய்தார்கள். இரு ஆலயங்களும் பூர்ணுநதியின் வடகரையில் நதியைப் பார்த்து தக்ஷிண முகமாக வெகு அழகாகவும் உறுதியாகவும் சிறியதாகவும் சுத்தமான கல்களினுல் கட்டப்பட்டன. இதில் ஆசார்யாள் ஆலயம் பதினுறு கோணமுள்ளதாகவும் சாரதாலயம் ஆறு கோணமுள்ளதாகவும் கட்டப்பட்டுள்ளது. முன்னுல் ஜனங்கள் நின்று தர்சனம் செய்யவேண்டிய ஸௌகர்யத்தை உத்தேசித்து விஸ்தாரமாக இடம்



ஜட்ஜ் A. ராமசந்திரய்யர்.



மைசூர் தர்மாதிகாரி குணிகல் ராமசாஸ்திரிகள்.

விடப்பட்டது. இவ்வாலயங்களின் மதிலுக்கு வெளியில் கிழக்கு திக்கில் ஸ்ரீ ஸ்வாமிகள் ஜாகை, பூஜை முதலிய ஸௌகர்யத்திற்குத் தக்கபடி ஒரு மடமும் அழகாக அமைக்கப்பட்டது.

இக்கட்டிடங்கள் பூர்த்தியாவதற்கு சுமார் இரண்டு வருடங்கள்வரை ஆயிற்று. காலடியின் பூர்வ ஸ்திதியைக் கவனிக்கும்போது இரண்டு வருஷகாலத்திற்குள் பூர்த்தியானதே மிகவும் ஆச்சர்யம். ஸ்ரீமத் ஆசார்யாளின் ஸங்கல்பத்தினுலும், அனுக்ரஹத்தினுலும் இப்பெரிய கார்யம் நடந்ததென்பதில் ஸந்தேகமில்லை. இவ்விஷயத்தில் திருநெல்வேலி ஜில்லாவில் கல்லிடைக்குறிச்சி, ஆம்பூர் முதலான இடங்களிலிருந்து ஏராளமான பக்தர்கள் அவசியமான கூலி ஜனங்களுடன் காலடிப் பிரதேசத்திற்குப் போய் அங்கேயே ஸ்திரமாக வாசம் வைத்துக்கொண்டு இக்கைங்கர்யத்தில் ஈடுபட்டார்கள். பண ஸௌகர்யத்தையும் நிர்வாகத்தையும் மிக அக்கரையுடன் கவனித்து வந்தவர்களில் கல்லிடைக்குறிச்சி ருமு. ச. அப்பாத்துரை அய்யரென்ற வைத்தியநாதய்யரையும், கை. சிவ. கைலாஸமய்யர் என்ற சாமி அய்யரையும் குறிப்பிட்டுச் சொல்லவேண்டியது அவசியம். காடாக இருந்த இடத்தை நாடாக ஆக்கி ஊராக ஆக்குவது லேசான கார்யமில்லை. தவிரவும் காலடி என்பது ஏற்கனவே சிறிய கிராமம். ஜன வசதி மிகவும் குறைவு. பக்கத்தில்கூட பெரிய கிராமங்கள் கிடையாது. ஸமீபத்திலுள்ள

ஜனங்களும் அன்னிய மதஸ்தர்கள். வேலையாட்கள் கிடைப்பது சிரமம். கட்டிடத்திற்கு வேண்டிய சாமான்களும் அகப்படாது. மற்றும் ஸாதாரணமான ஸாமான்களுக்குக்கூட முப்பது மைல் வடக்கேயுள்ள திருச்சூருக்கோ அல்லது இருபது மைல் தெற்கேயுள்ள கொச்சி, எர்ணுகுளத்திற்கோ போகவேண்டும். அக்காலத்தில் மோட்டார் பஸ் வசதிகளும் கிடையாது. ஆலயங்களில் பிரதிஷ்டை செய்யவேண்டிய ஸ்ரீ சாரதா பிம்பமும் ஸ்ரீமத் ஆசார்ய மூர்த்தியும் பஞ்சஉலோகத்தில் தயாரிக்கும்படி மதுரைக்கு சமீபத்திலுள்ள காரைக்குடி என்ற கிராமத்தில் ஏற்பாடு செய்யப்பட்டது. ஆலயங்களின் ஸ்தூபிகளில் வைக்க வேண்டிய ஸ்வர்ண கலசங்கள் திருநெல்வேலியில் தயாராய் வந்தன. ஸ்ரீ சாரதாம்பாள் ஆலயத்தின் வெளிப்பக்கத்தில் பிரதிஷ்டை செய்ய உத்தேசித்த மாஹேசுவரீ, கௌமாரீ, வைஷ்ணவீ, வாராஹீ, இந்திராணீ, சாமுண்டேசுவரீ இந்த ஸப்த மாத்ருகைகளின் சிலா விக்ரஹங்களும் தயாரிக்கப்பட்டன. ஸப்த மாத்ருகைகளில் முதலாவதான ப்ராஹ்மியே மூலமூர்த்தியான சாரதாம்பாள்.

மடத்திற்கு ஸ்வாதீனமான பூமியை ஸௌகர்யமாகப் பிரித்து நடமாடுவதற்கு லாயக்காக பாதைகள் போடப்பட்டன. கும்பாபிஷேக ஸமயம் தர்சனார்த்தம் வரக்கூடிய மடாதிபதிகளுக்கும் அதிக ஸௌகர்யங்களை அபேக்ஷிக்கக்கூடிய இதர

கனவான்களுக்கும் உபயோகப்படும்படி ஸ்திர மான சில வீடுகளும் கட்டப்பட்டன. ஆதிசங்கர பகவத்பாதருடைய ஜன்ம பூமியில் ஆலய நிர் மாணமாகும் விஷயத்தில் ஆஸேது ஹிமாசல முள்ள ஸகல ஆஸ்திக ஜனங்களுக்கும் உத்ஸாஹ மிருக்கக்கூடியது ஸஹஜமானதினுல் கும்பாபி ஷேகத்திற்கு ஏராளமான ஜனங்கள் நம் பரத கண்டத்தின் நாநா பக்கங்களிலிருந்தும் வருவார் களென்று எதிர்பார்க்கப்பட்டது. அப்படி வரக் கூடிய சிஷ்யர்களின் வாஸத்திற்காக விஸ்தார மாகக் கொட்டகைகள் போடப்பட்டன. அத்துடன் தனித்தனியே குடும்பத்துடன் அல்லது ஸ்நேகிதர் களுடன் ஜாகை செய்து கொள்ள விரும்பக்கூடிய வர்களுக்காக தெருத்தெருவாக வகுத்து மூங்கில் கம்புகளாலும் மூங்கில் பாய்களினுலும் 600 (அறு நூறு) வீடுகள் கட்டப்பட்டன. அந்தந்த ஜாகை களுக்கு வேண்டிய விளக்குகள், அம்மி குழவி யுள்பட ஸகல வித உபகரணங்களும் வைக்கப்பட் பட்டன. அந்தந்த தெருக்களுக்கும், பொதுவாக அக் காலடி பிரதேசம் பூராவுக்கும், இரவு பகல் வித்யாஸம் தெரியாமல் ஏராளமாக நல்ல பிரகாச முள்ள விளக்குகள் போடப்பட்டன.

ஸௌம்ய வருஷம் மாக சுக்ல துவாதசி தினம் (21—2—1910) கும்பாபிஷேகம் நடத்துவதென்று ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஆக்ஞை செய்தார்கள். உடனே நம் பரதகண்டத்திலுள்ள ஆசார்யசிஷ்யர் களான மடாதிபதிகளுக்கும் இந்து மஹாராஜாக்


களுக்கும் பிரஸித்த வித்வான்களுக்கும் மற்றும் சிஷ்ய வர்க்கங்களுக்கும் அழைப்புக்கடிதங்கள் அனுப்பப்பட்டன. பத்திரிகைகள் மூலமாகவும் ஜனங்களுக்கு அறிவிக்கப்பட்டது. காலடிக்ஷேத்ர மானது ஏர்ணுகுளம் போகும் ரயில் பாதையி லிருக்கும் அங்கமாலி என்ற ஸ்டேஷனிலிருந்து ஐந்து மைல் தூரத்திலிருக்கிறது. கும்பாபிஷேக உத்ஸவத்திற்கு வரும் ஜனங்களை ஸ்டேஷனில் உபசாரத்துடன் வரவேற்று வண்டிகளில் ஏற்றி காலடிக்கு அனுப்புவதற்கும், அவர்கள் காலடிக்கு வந்தவுடன் அவரவர்களுக்குத் தக்க ஜாகை ஏற் பாடு செய்துகொடுப்பதற்கும், அவரவர்கள் அபே க்ஷிக்கக் கூடிய சமயல் பாத்திரங்களையும் போஜன பதார்த்தங்களையும் ஸித்தம் செய்து கொடுப்ப தற்கும், பின்னும் பிரதி தினம் அவர்கள் ஸௌ கர்யங்களை அக்கரையுடன் கவனித்து வேண்டியது போல் செய்து கொடுக்கவும், நல்ல திறமையுள்ள வர்களாகவும் சாந்த ஸ்வபாவமுள்ளவர்களாகவும் அநேகம் பேர்கள் நியமிக்கப்பட்டு வெகு சிரத்தை யுடன் கவனித்து வந்தார்கள். இவ்வித கைங் கர்யம் தங்களுக்கு கிடைக்கவேண்டும், தங்களுக்கு கிடைக்கவேண்டும், என்று மிகவும் ஆவலுடன் திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து நூற்றுக்கணக் கான சிஷ்யர்கள் வாலண்டியர்களாகச்சேர்ந்து ஆசார்ய ஸேவை செய்து வந்தார்கள். காலடிக்கு வரும் ஜனங்களுடைய ஸௌகர்யங்களை ஸர்க்கார் முறையில் கவனித்துக் கொள்வதற்காக திருவாங்கூர் ஸம்ஸ்தானம் ஆரோக்கிய அதிகாரி

யான ஸாநிடரி கமிஷனர், அந்த ஜில்லா வைத்ய இலாகா மெடிகல் ஆபீஸர், கோட்டயம் திவான் பேஷ்கார், போலீஸ் அதிகாரிகள், அஞ்சல் இலாகா அதிகாரிகள், முதலானவர்களும் தங்கள் தங்கள் சிப்பந்திகளுடன் தகுந்த ஏற்பாட்டுடன் இருந்து வந்தார்கள். இவ்வேராளமான ஜனக்கூட்டத்திற்கு தகுந்தபடி போஜன பதார்த்தங்கள் எல்லாவற்றையும் தயாரிக்கும் பொறுப்பை திருச்சூர் வியாபாரியும் பக்தருமான பிரஹ்மதேசம் வெங்கு வய்யர் ஏற்றுக்கொண்டு எவ்வித குறையுமன்னியில் நடத்தி வந்தார். இவ்விதம் கும்பாபிஷேகத்திற்கு வேண்டிய ஸகல ஏற்பாடுகளும் அதிவிமர்சையாக நடந்து வந்தன.

அத்தியாயம் 3

காலடி கும்பாபிஷேகம்

இவ்விதமாக காலடி க்ஷேத்திரம் பரிஷ்காரமாகி ஆலயங்களும் நிர்மாணமாகி, கும்பாபிஷேக மஹோத்ஸவத்திற்காக வேண்டிய ஸகல ஸாமக்ரிகளும் சேகரிக்கப்பட்டு எல்லாஏற்பாடும் செய்யப்பட்டு தயாராகவிருந்த ஸமயம் ஸ்ரீஸ்வாமிகள் அவர்கள் ஸஞ்சாரக் கிரமமாய் காலடிக்கு ஐந்து மைல் தூரத்தில் பூர்ணநதிக்குத் தென்பக்கத்திலுள்ள பெரும்பாவூர் என்ற கிராமத்தில் விஜயம் செய்திருந்தார்கள். அங்கு வந்ததினம் ராத்திரியில் ஸ்ரீஸ்வாமிகள் முன்னிலையில் வெள்ளை வஸ்திரம் தரித்துக்கொண்டு ஒரு கைம்பெண் ஸ்வப்னத்தில் தென்பட்டாள். அவள் மந்தஹாசத்துடன், விருக்ஷமூலத்திலேயே இருப்பதாகவும் ஸ்ரீஸ்வாமிகளை அழைப்பதற்காக வந்ததாகவும், சொல்லிவிட்டு மறைந்து விட்டாள். இவ்விதம் ஸ்வப்னத்தில் தோன்றியது சுப சகுனம் தானு வென்று யோஜிக்க இடம் கொடுத்தது. மறுநாள் ஸ்ரீகண்ட சாஸ்திரிகளும் ராமசந்திரய்யரும், எல்லா ஸாமக்ரிகளும் ஸித்தமாயிருந்தும் விஷயத்தை ஸ்ரீஸ்வாமிகளிடம் தெரிவிப்பதற்காக, பெரும்பாவூர் போய்ச் சேர்ந்தார்கள். ஸ்ரீஸ்வாமிகளவர்கள் அவர்களிடம் வேறு எவ்வித விஷயத்தையும் விசாரிக்காமல், காலடியின் ஸந்நிவேசத்தைப்பற்றிச் சொல்ல வேண்டு மென்று கேட்டார்கள். அப்



ஆர்யாம்பாள் தர்சனம்.



காலடியில் ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்.

பொழுது ஒவ்வொரு விஷயத்தையும் விஸ்தார மாக ஸ்ரீகண்டசாஸ்திரிகள் சொல்லிக்கொண்டு வருகையில், சாரதாலயம் கட்டியிருக்கிற பிரதே சத்தின் ஸமீபத்தில் ஒரு அசோக விருக்ஷமிருப்ப தாகவும், அதனடியில் ஆதி ஆசார்யாளுடைய தாயாரின் ஸம்ஸ்காரபூமியென்று ஜனங்கள் வந்து பிரதக்ஷிண நமஸ்காராதிகள் செய்து தீபம் ஏற்று கிறார்களென்றும் சொல்லிக் கொண்டு வரும் போதே, ஸ்ரீஸ்வாமிகளின் சரீரமெல்லாம் படபட வென்று நடுங்கியது. கண்களிலிருந்து தாரை தாரையாக நீர் பெறுகவாரம்பித்தது. தழதழத்த குரலுடன் ஆசார்யரின் மாதாவின் ஸ்மரணத் துடன் ஏதோ சொல்ல வாரம்பித்தார்கள். சொல்ல முடியவில்லை. பக்கத்திலிருந்தவர்கள் காரணம் தெரியாமல் திகைத்து நின்றார்கள். சில நிமிஷம் சென்று ஸ்ரீஸ்வாமிகள் ஆனந்த பரவசராய் தான் கண்ட ஸ்வப்ன ஸமாசாரத்தைச் சொன்னார் கள். தாம் ஸங்கல்பித்து நடந்துவரும் கார்யம் பரமாசார்யாளுடைய பிரேரணையினாலேயே ஏற்பட் டிருக்கிறதென்றும், காலடி பிரதேசத்தில் தாம் பிரவேசிப்பதற்கு ஆசார்ய மாதாவின் பரிபூர்ண ஸம்மதியும் அழைப்பும் இருப்பதாகவே ஸ்வப் னத்தின் தாத்பர்யமென்றும், எடுத்துச்சொல்லி மறுநாள் காலையிலேயே காலடிக்கு வந்து சேருவ தாக அனுக்ரஹித்தார்கள்.

அப்படியே மறுநாள் அதாவது மாக சுக்ல த்விதீயை யன்று (11—2—1910) காலடிக்கு விஜயம் செய்தார்கள். காலை எட்டுமணி சுமாருக்கே

பூர்ணு நதியைத்தாண்டி வடகரைக்கு வந்து சேர்ந்தார்கள். வந்தவுடன் மாதாவின் ஸம்ஸ்கார பிரதேசத்திற்கு வந்து பிரதக்ஷிணமாக சுற்றிவந்து ஸாஷ்டாங்க நமஸ்காரம் செய்துவிட்டு, ஸ்வல்ப காலம் பரமாசார்யாரை அனுஸந்தானம் செய்து கொண்டிருந்துவிட்டு, பிறகு தன் வாஸஸ்தானத்திற்கு வந்து சேர்ந்தார்கள். காலடிக்ஷேத்திரத்தை தர்சித்தவுடன் அதன் மஹிமையை இரண்டு சுலோகங்களால் விளக்கிஞர்கள்.

अद्राक्षं गुरुवर्यजन्मधरणिं कालट्यभिख्यां महा
मोहध्वान्तनिवारणैकतरणिं संसारसिन्धोर्दृढाम् ।
नौकां काममुखारिषट्कविपिने दावायमानां मुहु
वैराग्यादिसुसस्यपोषणविधौ कादम्बिनीं कामपि ॥
अद्राक्षं यत्र पूर्णा प्रवहति सततं शैत्यमाधुर्यराज
त्तोया स्वार्णोनिमज्जज्जनततिदुरितौघाशुविध्वंसदक्षा ।
यत्रार्येशावतारो जगदुपकृतये पूर्वमासीद्धरां तां
कालट्याख्यां वहन्तीं बहुजनिरचितापारपुण्याप्यवीक्षाम् ॥

[பக்தி ஸுதா தரங்கிணி, 435]

அன்று நித்யானுஷ்டாஞதிகள் எல்லாம் முடிந்த பிற்பாடு ஸாயங்காலம் நான்கு மணி சுமாருக்கு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் பாதசாரியாகவே புறப்பட்டு, நிர்மாணம் செய்யப்பட்டிருந்த தேவாலயங்களையும், தெருத்தெருவாக அமைக்கப்பட்டிருந்த வீடு வரிசைகளையும், ஸத்காரத்திற்காகவும் கும்பாபிஷேகத்திற்காகவும் சேகரிக்கப்பட்டிருந்த ஸகல பதார்த்தங்களையும், காலடி யெல்லாம் பிரகாசிக்கும்படி போட்டிருந்த தீபஸ்தம்பங்களையும்,

மற்றும் ஏற்பாடுகளையும், தாமே நேரில் கண்டு ஸந்தோஷித்து மேல்கார்யங்களும் ஸர்வோத்தமமான மாதிரியிலேயே நடக்குமென்று அனுக்ரஹித்து அங்குள்ள பரிவாரங்களை உத்ஸாஹப் படுத்தினர்கள்.

தேவதாப்பிரதிஷ்டைக்கு வேண்டிய யாகஹோமாதிகளை நடத்துவதற்காக இரண்டு தேவாலயங்களுக்கும் மத்தியில் விஸ்தாரமாக சாஸ்திர விதிப்படி யாகசாலை அமைக்கப்பட்டது. அதற்கு வேண்டிய ஆசார்யர், ரித்விக் பிராஹ்மணர்கள் சிருங்கேரியிலிருந்தும் மைஸூர் பிராந்தியத்திலிருந்தும் வரவழைக்கப்பட்டனர். தக்ஷிணதேசத்திலிருந்தும் இம் மஹோத்ஸவத்தில் கலந்து கொள்ளக்கூடிய வைதிகர்கள் ஏராளமாய் வந்திருந்தார்கள். விதிமுறை தவராமல் ஸகல கர்மாக்களும் நடந்து வரும்படி கவனித்துக் கொள்வதற்காக முக்கியமாக மைஸூர் ஸமஸ்தானம் தர்மாதிகாரியான குனிகல் ராம சாஸ்திரிகளையும் அவருக்கு ஸஹாயமாக வேறு சில வித்வான்களையும் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஆக்ஞை செய்தார்கள். அவர்களுக்கு ஸஹாயமாயிருந்து கொண்டு யாகசாலையிலுள்ள ஸகல ஏற்பாடுகளையும் கார்யங்களையும் குறைவன்னியில் நிர்வஹித்து கொடுக்கும் பொறுப்பை திருநெல்வேலி ஜில்லாவில் பிரஸித்த வக்கீலாகவும் ஸ்ரீமடம் தர்மாதிகாரியாகவுமிருந்து ஸ்ரீஸ்வாமிகளால் "தர்ம சீலர்" என்ற பட்டம் வழங்கப்பட்ட A. கிருஷ்ணஸ்வாமி அய்யரிடம் கொடுத்தார்கள்.

மாக சுக்ல பஞ்சமி ஸோமவாரம் (14-2-1910) காலையில் ஸ்ரீஸ்வாமிகளானவர்கள் தானே யாக சாலைக்கு விஜயம் செய்து யாகஸங்கல்பம் செய் வித்தார்கள். ஆசார்யார் முதலாக ரித்விக்குகள் கிரமப்படி கிரணம் செய்யப்பட்டார்கள். இவ் விதம் வரிக்கப்பட்ட பிராஹ்மணர்களையும், கூட விருந்து கவனித்து வரவேண்டிய பண்டிதர்களை யும், இந்த யாக கைங்கர்யத்தில் நியமிக்கப்பட்ட மற்றவர்களையும், பார்த்து வெகு நியமனத் துடனும் பக்தி சிரத்தையுடனும் ஸகலகார்யங் களையும் நடத்தி ஆசார்ய அனுக்ரஹத்திற்குப் பாத்திரமாக வேண்டுமென்று ஆசீர்வதித்து விட்டுத் திரும்பினார்கள். அது முதல் கிரமப்படி மூர்த்திகளுக்கு ஜலாதிவாஸம், தான்யாதிவாஸம், சய்யாதிவாசம், ஸ்தலாதிவாஸம், அதனை ஸம்பந் தித்த ஹோமங்கள், பிரதிஷ்டைக்கு அங்கங் களான மந்திர ஜப புரஸ்சரணாதிகளும், யதோக் தமாய் அதிவிமர்சையாக ஏழு நாட்கள் நடந்தன. அங்கங்களெல்லாம் பூர்த்தியான பிறகு அதாவது ஸௌம்ய வருஷத்திய மாக சுக்ல துவாதசி திதி (21—2—1910) ஸோமவாரத்தில் அபிஜித் முகூர்த் தத்தில் வேத கோஷமும் வாத்ய கோஷமும் முழங்க, ஸத்யஸங்கல்பங்களான ஸ்ரீஸ்வாமி களவர்களின் ஸங்கல்பப்படி மேற்கேயுள்ள ஆல யத்தில் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யார் மூர்த்தியும், கிழக்கேயுள்ள ஆலயத்தின் வெளிப் பக்கத்தில் ஸப்தமாதிருகைகளும் கர்ப்ப கிருஹத் தில் ஸ்ரீசாரதாம்பா மூர்த்தியும், விதிவத்தாக பிரதிஷ்டை செய்யப்பட்டன.

ஸ்ரீமத்ஆதிசங்கரர் பரமேசுவரருடைய அவதாரமாயிருப்பதுடன் ஞான மார்க்கத்தை பிரதிஷ்டை செய்வதற்காகவே அவதாரம் செய்ததால் தக்ஷிணாமூர்த்தி அவஸரத்தின் அவதாரம் என்று சொல்லப்படுகிறது

अज्ञानान्तर्गहनपतितानात्मविद्योपदेशं
त्रातुं लोकान् भवदवशिखातापपापच्यमानान् ।
मुक्त्वा मौनं वटविटपिनो मूलतो निष्पतन्ती
शंभोर्मूर्तिश्चरति भुवने शंकराचार्यरूपा ॥

[சங்கர விஜயம் IV, 60]

இந்நியாயத்தை அனுஸரித்து காலடியில் ஸ்ரீமத் ஆசார்யமூர்த்தி தக்ஷிணாமுகமாகவே பூர்ணாநதிக்கு அபிமுகமாக பிரதிஷ்டை செய்யப்பட்டது ஸ்ரீவித்யாஸ்வரூபிணியான அம்பிகையையும் ஸ்ரீலலிதா ஸஹஸ்ர நாம ஸ்தோத்ரத்தில்


स्वतन्त्रा सर्वतन्त्रेशी दक्षिणामूर्तिरूपिणी ।
सनकादिसमाराध्या शिवज्ञानप्रदायिनी ॥

என்று தக்ஷிணாமூர்த்தி ரூபிணியாக சொல்லப்பட்டிருக்கிறபடியால் ஸ்ரீசாரதாம்பாளையும் தக்ஷிணாபிமுகமாகவே பிரதிஷ்டை செய்யப்பட்டது இவ்விதம் பிரதிஷ்டையான பிறகு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஆலயங்களுக்குள் விஜயம் செய்து, மூர்த்திகளில் அறுபத்திநான்கு கலைகளையும் ஆவாஹனம் செய்து, விசேஷமாக ஸாந்நித்யம் ஏற்படும்படி செய்து, யதோக்தமாய் தன் கரங்களினலேயே பூஜை செய்தார்கள். பிறகு அபிஷேக தீர்த்தத்தை அங்கு கூடியிருந்த ஏராளமான சிஷ்யவர்க்


கங்களுக்கு ஸ்ரீஸ்வாமிகளவர்களே தன் கையால் கொடுத்து அனுக்ரஹித்தார்கள்.

இந்த நிகரற்ற மஹோத்ஸவத்தை தர்சித்து கிருதார்த்தர்களாகக் கருதி ஆஸேது ஹிமாசல முள்ள நம் தேசத்தின் எல்லாப் பக்கங்களி லிருந்தும் ஏராளமாக ஜனங்கள் வந்திருந்தார்கள். இவர்களுக்கு காலே எட்டுமணிக்கே ஆரம்பமாகி பங்க்தி, பங்க்தியாக பிராஹ்மண போஜனம் நடந்து வந்தது. இதர ஜாதியார்களுக்கும் அவ ரவர்களுக்கு தக்கபடி போஜனுதி வஸதிகள் செய்து கொடுக்கப்பட்டது. அந்த ஸமயம் நடந்த ஆதித்தியத்திற்கு, வஸிஷ்டர், விசுவாமித்ரர் ஸைன் யத்திற்கும், பரத்வாஜர் பரதன் ஸைன்யத்திற்கும் செய்து வைத்த ஆதித்தியமே உபமானமாகும்

அன்று ஸாயங்காலம் நான்குமணி சுமாருக்கு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் மடத்தின் முன் பாகத்தில் ஆஸனத்தில் அமர்ந்து அங்கு கூடியிருந்த ஆயிரக் கணக்கான பக்தர்களுக்கும் ஸ்ரீமத் சங்கரபகவத் பாதாளுடைய மஹிமையையும் அவர்களால் பிர பஞ்சத்திற்கு ஏற்பட்ட மஹத்தான உபகாரத்தை யும் விஸ்தாரமாக உபதேசித்து இந்த க்ஷேத்திரத் திற்கு சிஷ்யர்கள் அடிக்கடி வந்து தர்சனம் செய்து கிருதார்த்தர்களாக வேண்டுமென்று எடுத்துச் சொன்னுர்கள். இந்த பெரிய கார்யத்தில் ஆதி முதல் விசேஷ ஊக்கத்துடன் ஸேவை செய்துவந்த A ராமச்சந்திரய்யருக்கு "குருபக்த கேஸரி" என்ற பிருதும் ரத்னங்கள் இழைத்த ருத்ராக்ஷகண்டி



காலடி யாகசாலை.



காலடி கும்பாபிஷேகம்.

முதலானதுகளையும் அளித்து அனுக்ரஹித்தார்கள். அவருக்கு ஸஹாயமாயிருந்து ஆலயத்தை நிர்மாணம் செய்து கொடுத்த ஸுப்பராயரையும் சிலாகித்து அனுக்ரஹித்தார்கள். ஸ்ரீஸ்வாமிகள் அவர்களின் ஆக்ஞையின்படி பகவத் பாதர்களின் கிரந்தங்களை ஒருங்கே சேர்த்து "ஸ்ரீ சாங்கர கிரந்தாவளி'' என்ற பெயருடன் இருபது ஸம்புடங்களாக அச்சிட்டு வெளியிட உத்தேசித்திருந்ததில் அந்த ஸமயம் தயாராயிருந்த பத்து சம்புடங்களை ஸ்ரீரங்கம் ஸ்ரீவாணி விலாஸ் பிரஸ் ஸ்தாபகர் T. K. பாலஸுப்ரஹ்மண்ய அய்யர் ஸமர்ப்பணம் செய்தார்கள். அவருக்கும் "குருபக்த சிகாமணி'' என்ற பிருது அளிக்கப்பட்டது. அன்று ஸபையில் மைஸூர் ராஜ்யத்திலுள்ள சிவகங்கா மடாதிபதி ஸ்ரீஸுப்ரஹ்மண்ய அபிநவ ஸச்சிதாநந்த பாரதி ஸ்வாமிகளும், திருவாங்கூர், மைஸூர் ஸம்ஸ்தானங்களில் திவான் பதவி வஹித்திருந்த V. P. மாதவ ராவ், திருவாங்கூர் ஸம்ஸ்தான திவான் P. ராஜகோபாலாசார்யார், மைஸூர் ஸம்ஸ்தான கௌன்ஸில் மெம்பர் H. V. நஞ்சுண்டய்யா, சிதம்பரம் மஹாமஹோபாத்யாய ஹரிஹரசாஸ்திரிகள் முதலான அநேகமாயிரம் வைதிக லௌகிக ஜனங்கள் வந்திருந்தார்கள். அங்கு வந்திருந்த சாஸ்திரக்ஞர்களுக்கும் மற்றும் வித்வான்களுக்கும் அவரவர் யோக்கியதைக்குத் தக்கபடி ஸம்மானங்கள் கொடுக்கப்பட்டன.

பிரதிஷ்டையான மூர்த்திகளில் விசேஷ ஸாந்நித்யம் ஏற்படுவதற்காக ஸ்ரீஸ்வாமிகளவர்கள்

காலடி க்ஷேத்திரத்திலேயே மூன்று மாஸ காலம் வாஸம் செய்து பிரதி தினமும் இரண்டு ஸன்னிதிகளிலும் சில மணி நேரம் ஏகாந்தத்தில் மஹாமந்திரங்களை ஜபம் செய்து தியானம் செய்து கொண்டும் அம்மூர்த்திகளை விசேஷமாக ஆராதித்துக்கொண்டும் வந்தார்கள். இதனுல் கும்பாபிஷேக ஸமயம் வருவதற்கு ஸௌகர்யப்படாதவர்கள் பின்னுல் வந்து ஸாவகாசமாய் தர்சித்து கிருதார்த்தர்களாவதற்கு அவகாச மேற்பட்டது. தர்சனுர்த்தம் வருகிற ஜனங்களுக்கு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் பல ஸத் விஷயங்களைக் குறித்து உபதேசம் செய்து கொண்டும் ஆனந்தமாய் காலம் கழித்து வந்தார்கள். அந்த ஸமயத்தில் கொச்சி ஸம்ஸ்தானத்திய மஹாராஜாவும், மைஸூர் ஸம்ஸ்தானத்திய மஹாராஜாவும், காலடி க்ஷேத்திரத்திற்கு வந்து தர்சனம் செய்து ஸ்ரீஸ்வாமிகளவர்களின் விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானுர்கள். அப்பொழுது மைஸூர் மஹாராஜா அவர்களுக்கு "தர்மமூல" என்ற பிருதையும் அளித்தார்கள். இவ்விதம் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் காலடி க்ஷேத்திரத்தில் வஸித்திருந்த காலத்தில் மந்திரோபதேசங்களையும் பாஷ்யம் முதலிய கிரந்தங்களின் உபதேசங்களையும் மற்றும் ஹிதோபதேசங்களையும் பெற்று கிருதார்த்தரானவர்கள் அளவற்றவர்கள்.

இவ்விதமாக காலடியில் எல்லா கார்யங்களும் நிர்விக்னமாய் முடியவேண்டியதற்காக ஏற்கனவே

மஹா கணபதியை ஒரு அசுவத்த விருக்ஷத்திற் கடியில் பிரதிஷ்டை செய்து

अश्वत्थोऽयं प्रपञ्चो न हि खलुसुखलेशोऽप्यत्र तस्माज्जिहास्यो
लोका इत्यादरेण प्रणतभयहरो वारणाग्रयास्य एषः ।
बोधायैव स्वयं किं वसति दृढतराश्वत्थमूले कृपालु -
र्नाहं जानामि यूयं वदत बुधवराः किं तथा वान्यथा वा ॥

[பக்திஸுதாதரங்கிணி P. 6]

என்று ஸ்துதித்துப் பிரார்த்தனை செய்திருந்தார்கள். அப்படியே அங்குள்ள சாஸ்தாவையும் ஸ்துதி செய்தார்கள்:-

शास्ता दुष्टजनानां
पाता पादाब्जनम्रलोकानाम् ।
कर्ता समस्तजगता-
मास्तां मद्धृदयपङ्कजे नित्यम् ॥

गणपो न हरेस्तुष्टिं
प्रद्युम्नो नैव दास्यति हरस्य ।
त्वं तूभयोश्च तुष्टिं
ददासि तत्ते गरीयस्त्वम् ॥

கும்பாபிஷேக ஸமயத்திலும் பின்னுல் காலடியில் வாஸம் செய்த ஸமயத்திலும் ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாளேயும் ஸ்ரீ சாரதாம்பாளேயும் ஸ்ரீ கிருஷ்ண பகவானேயும் பலவிதமாக ஸ்தோத்ரம் செய்துபிரார்த்தித்திருக்கிருர்கள். அவர்கள் அந்த ஸமயம் அனுக்ரஹித்த சுலோகங்களில் அகப்பட்டவைகளே மாத்திரம் "பக்திஸுதாதரங்கிணி" யில் பக்கம் 179 முதல்

203 வரையிலும், பக்கம் 72 முதல் 94 வரையிலும், 411–412 பக்கங்களிலும். அச்சிடப்பட்டிருக்கிறது. தேசத்தை அரசாளுபவர்கள் ஆஸ்திகர்களாக இருந்து வைதிக தர்மத்திற்கு ஸஹாயம் செய்து கொடுக்காமலிருக்கும் பக்ஷத்தில் தர்மபரிபாலனம் ஸாத்தியமில்லை, ஜனங்களுக்கும் ஆஸ்திக்ய புத்தி பலமாக வேண்டும், என்பதை

वर्णाश्रमादिपरिपालनशक्तिमाशु
दत्त्वा दृढां नृपततेरपि भूयसीं च।
श्रद्धां श्रुतिस्मृतिततिष्वचलां च लक्ष्मीं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

आस्तिक्यरत्नमिह पुण्यचयेन लब्धं
कल्यम्बुधौ निपतितं तरसार्यपाद।
उद्धृत्य तेन परिपालय लोकमेनं
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥

முதலான சுலோகங்களில் வற்புறுத்தியதுடன் அவ்விதம் ராஜஸஹாயமில்லாத பக்ஷத்தில் இப் பீடாதிபத்யப் பொறுப்பை தாம் ராஜீநாமா செய்து ஸ்ரீமத் ஆதி ஆசார்யாரிடமே ஒப்புவித்து விடுவதாகவும் சொல்லியிருக்கிறுர்கள்.

शुद्धाद्वैतपथस्य पालनकृते पूर्वं त्वया स्थापित-
स्थानेष्वन्यतमस्थशिष्यतातिगम्तत्कार्यकृत्यक्षमः।
अज्ञानां धुरि कीर्तनीयचरितो नाद्यापि विद्यालय-
स्तस्मात्स्थानमिदं गुरूत्तम कृपावार्धे त्वमेवाश्रय ॥

यद्वा दुर्मतभेदपाटववतीं मेधां नवोन्मेषिणीं
विद्यामाश्रुतशास्त्रपाठनचणां दद्या द्रुतं चेद्गुरो ।
साहाय्यं च सुधन्वपार्थिवसदृग्राजावलेस्तर्ह्यहं
त्वद्दीक्षाबलतो यते यतिपते तत्त्वाध्वसंवृद्धये ॥

அப்படியே அம்பாளைப் பிரார்த்திக்கும் போதும்

आसेतुशीतगिरिमध्यनिवासिलोकान्
स्वस्वाश्रमाद्युचितकर्मनिषक्तचित्तान् ।
शीघ्रं विधाय करुणामृतवारिराशे
श्रीशारदाम्ब सितचित्तमिमं कुरुष्व ॥
आकल्पकालटिनिवासनिबद्धदीक्षा
भूत्वा तथाखिलजगत्यपि धर्मवृद्धिम् ।
प्रापय्य लोकपरिरक्षणमाचरन्ती
श्रीशारदाम्ब सितचित्तमिमं कुरुष्व ॥
या श्रृङ्गशैलशिखरे यतिरूपधर्त्रा
संस्थापितापि गिरिजापतिना पुरा सा ।
कालट्यभिख्यविषयेऽपि मयार्थिता त्वं
वासं कुरुष्व जगतामवनाय वाणि ॥
सांनिध्यमस्मिन्कुरु मूर्तिवर्ये
चिरं कृपातो जगदम्ब वाणि ।
प्रवर्तयासेतुतुषारशैलं
सद्धर्ममेनं जगतां हिताय ॥
सन्ध्यादिकर्माण्यपि हा विहाय
रात्रिंदिवं स्वोदरपूरणेच्छन् ।
नरानिमान्पापभयेन शून्या-
नसतो विधायाश्वव वाक्सवित्रि ॥

என்றெல்லாம் ஜனங்களுடைய சிரத்தைக் குறைவைக்கண்டு வருந்தி அவர்களுக்கு ஸ்வதர்மா சரணையில் ஊக்கம் வரவேண்டுமென்று மிகவும் உறுக்கமாய் பிராத்தித்திருக்கிறூர்கள்.

இவ்விதமாக லோக ஹிதார்த்தமாக காலடியில் கும்பாபிஷேகம் செய்தபிறகும் அங்கே மூன்று மாஸகாலம் வாஸம் செய்தபின் சிருங் கேரிக்கு திரும்புவதாகஉத்தேசித்தார்கள். அதற்கு முன் காலடியில் ஏற்படுத்தப்பட்ட ஆலயாதி நிர் வாஹத்தை எவ்வித குறையுமன்னியில் விமர்சை யாக கவனித்து வரவேண்டிய பொருப்பை A.ராமச் சந்திரய்யரே வஹிக்கவேண்டும் என்று ஸ்ரீ ஸ்வாமி களவர்கள் செய்த ஆக்ஞையை அனுஸரித்து அவரும் அங்கேயே ஸ்திரமாக இருந்து கவனித்து வருவதாக ஏற்றுக்கொண்டார். ஸ்ரீ ஸ்வாமிகளவர் கள் கூடவே யாத்திரையில் வந்து கொண்டிருந்த வயோ விருத்தரும் ஞானவிருத்தருமான ஸ்ரீராமா நந்த ஸரஸ்வதீ ஸ்வாமிகள் என்பவரை காலடியிலே யே இருந்து அபேக்ஷிக்கிற சிஷ்யர்களுக்கு ஹிதோ பதேசம் செய்து கொண்டும் தன் ஆசிரம தர்மத்தை பரிபாலனம் செய்து கொண்டும் இருக்கும்படி ஆக் ஞாபித்தார்கள். காடாகவிருந்தவிடத்தை பரிஷ் காரம் செய்து வாஸத்திற்கு யோக்கியமாக செய்து விட்டபடியாலும் ஆலய கைங்கர்யத்தையுத்தே சித்து அங்கேயே சிலர்கள் ஸ்திரமாக வாஸம் செய்ய வேண்டியிருந்தபடியாலும் அவர்களுடைய ரக்ஷைக்காக ஒரு அசுவத்த விருக்ஷத்தில் ஆஞ்ச நேயரையும் ஒரு அசோக விருக்ஷத்தில் கார்த்த

வீர்யார்ஜுனரையும் ஆவாஹனம் செய்து தாமே நேரில் அவ்விருக்ஷங்களுக்கு பூஜை செய்தார்கள். அந்த தேவதைகளுக்கு முறையே சனிவாரத்திலும் குருவாரத்திலும் விசேஷ பூஜைகள் நடத்திவர வேண்டுமென்று ஏற்பாடு செய்தார்கள். இவ்விதம் காலடி வைதிக லௌகிக நிர்வாஹங்களைப் பற்றி தக்கபடி ஏற்பாடு செய்து விட்டபடியால் ஸ்வஸ்த சித்தர்களாக ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் அங்கிருந்து புறப்பட்டு யாத்திராக் கிரமமாக சிருங்கேரி போய்ச்சேர்ந்தார்கள்.

காலடி பரிஷ்காரம், ஆலயநிர்மாணம், கும்பாபிஷேகம் இவைகளை சுருக்கமாக வர்ணித்து ஸ்ரீசாரதாம்பாள் ஆலயத்தில் வைக்கப்பட்டிருக்கும் சிலா சாஸனத்திலுள்ள சுலோகங்களை இங்கு குறிப்பிடுவது உசிதமாகுமென்று தோன்றுகிறது.

प्रायशो वर्षसायस्रद्वितयात् प्राक् सदाशिवः ।
दृष्ट्वाऽधर्मेण धर्मस्य ग्लानिं सर्वत्र भूतले ॥ १

कालट्यां केरले श्रीमच्छंकराचार्यसंज्ञया ।
प्राप्य जन्म स्वप्रतिज्ञापालनार्थमिवादरात् ॥ २

विजित्य सर्वान् वादेन दुर्मताविष्टचेतसः ।
आविष्कृत्यासमन्ताद्वैदिकं धर्ममुत्तमम् ॥ ३

विशुद्धाद्वैतविज्ञानमासेतुहिमशैलकम् ।
स्वयं संबोध्य बहुशः कृत्वा चात्मवशंवदान् ॥ ४

जुगोप धर्मं तेनास्मानिति वृत्तं पुरातनम् ।
ज्ञात्वाऽप्याचार्यचारित्रबोधकग्रन्थराशिभिः ॥ ५

अकृतज्ञा वयं मोहान्न स्मरामो जगद्गुरुम्।
तेन पापेन चास्माकं त्रिविधापत्तिसंभवः॥ ६

इत्यालोच्य महायोगी हितैषी जगतां सदा।
श्रीगुरुः सच्चिदानन्दशिवाभिनवपूर्वकः॥ ७

नृसिंहभारतीस्वामी दक्षिणाशामठाधिपः।
कृतघ्नतानिरासाय जनताभ्युदयाय च॥ ८

कालट्यां जन्मभूतायां भूमौ लोकगुरो द्रुतम्।
निर्माप्यागारयुगलं मात्रा साकं सुतस्य च॥ ९

स्मृतिर्भूयादेकदैवेत्याकलय्य हृदम्बुजे।
मूर्तिं गुरोर्जनिमतां मूर्त्या वाण्याः सहैव हि॥ १०

शालिवाहनभूपस्य चन्द्राग्निवसुभूमिते।
शके गते ततः सौम्यवर्षमाघस्य चार्जुने॥ ११

पक्षे दिने द्वादशके सोमवारान्विते शुभे।
संप्रतिष्ठाप्य वेदोक्तविधानेनातिभक्तितः॥ १२

कुम्भाभिषेकं च ततः कारयामास योगिराट्।
अकरोच्छात्रलोकं च करुणाभाजनं गुरोः॥ १३

आसन् करणवच्छिष्याः कार्येऽस्मिन् निम्नदर्शिताः।
प्रधानो मूलराजः स्याद्धग्निवंशाब्धिचन्द्रमाः॥ १४

द्वितीयो माधवामात्यो विश्वनाथतनूभवः।
तृतीयो रामचन्द्रार्यो विश्रान्तन्यायपस्तथा॥ १५

तुरीयः सुब्बरायाख्यः शिल्पज्ञो गुरुभक्तिमान्।
योऽप्यन्यः कार्यवाही स्यादाचार्याङ्घ्रिरजः कणः॥ १६

नितरां करुणापात्रं गुरोः पूर्वकृतैः शुभैः।
श्रीकण्ठः साधकस्तत्र देशिकाज्ञावशंवदः॥ १७

शिलेयं स्वगतं वृत्तं वाचकानामवृनिशम् ।
बोधयन्ती चिरं जीया द्यावच्चन्द्रदिवाकरम् ॥ १८

ஸ்ரீமத் ஆசார்யாளுடைய தாயார் ஆர்யாம்பாளின் ஸம்ஸ்கார ஸ்தலத்தில் கட்டப்பட்டிருக்கும் பிருந்தாவனத்தில் உள்ள பிரசஸ்தி சுலோகங்களாவன:—

श्रीमच्छंकरगुरुरा-
डमरैरपि काङ्क्ष्यमाणदिव्यपदम् ।
प्रापय्य स्वां जननीं
परिकल्प्य चितिं चकार चान्त्येष्टिम् ॥ १
यत्रेयं सा विमला
भूमिर्भाभाति सकलदुरितहरा ।
या च स्वनमनपूजन-
रतजनतासौख्यदायिनी सततम् ॥ २
निर्मथ्य बाहुमचिरा-
द्दक्षिणमग्निं ततः समाहृत्य ।
कर्म यथावद्यस्यां
चक्रे मातुर्जगद्गुरुः स्वस्य ॥ ३
शंकरगुरुवरचरितं
या भूः कालाद्बहोः प्रवृत्तमपि ।
बोधयितुं जनताया
आस्ते पूर्णानदीतटेऽद्यापि ॥ ४
तादृक्षमहिमवत्यां
भूमौ स्वद्रष्टृपापभङ्गायाम् ।
कल्याणजालवितरण-
दक्षायां पुण्यभूवरेण्यायाम् ॥ ५

इन्दुशुचिगजधरोत्तर
 सौम्याख्ये शालिवाहशकवर्षे ।
माघसितपक्षवासर-
 नाथतिथौ सोमवासरे मोदात् ॥ ६
श्रीमच्छंकरदेशिक-
 रचितव्याख्यानभद्रपीठवरम् ।
अधितिष्ठद्भिरिदानीं
 सच्चित्सुखपूर्वनवनृसिंह्माख्यैः ॥ ७
श्रीशंकरार्यमातुः
 स्मृतिजननाय प्रतिष्ठितो ग्रावा ।
जीयाच्चिरं दिशन्नय-
 मिह वसतां सौख्यमद्भुतं नृणाम् ८

அத்யாயம் 4

காலடி ஸ்தாபனங்கள்.

ஸ்ரீமத் சங்கர பகவத் பாதாசார்யாளுடைய ஜன்ம பூமியான காலடி க்ஷேத்திரத்தில் ஆலயங்களை நிர்மாணம் செய்து நம் நாடு பூராவும் விசேஷமாக குருபக்தியைப் பரவச்செய்து ஸ்ரீமத் ஆசார்யாரவர்கள் சிருங்கேரிக்கு திரும்பிப்போய் கொஞ்ச காலத்திற்குள் ஸித்தியடைந்தார்கள். அவர்களுடைய அத்யந்த அனுக்ரஹித்திற்குப் பாத்திரமாயிருந்து அப்பீடத்தில் அமர்ந்த ஸ்ரீ சந்திரசேகரபாரதீ ஸ்வாமிகளவர்களும் காலடியில் விசேஷமான அபிமானம் செலுத்திவந்தார்கள். அவர்கள் 1923ல் சிருங்கேரியிலிருந்து புறப்பட்டு தக்ஷிண தேசத்தில் விஜய யாத்திரையாக ஸஞ்சாரம் செய்து வந்தார்கள். தாம் காலடிக்கு வந்து சேரும் முன் அங்கே ஒரு வேதபாடசாலை ஏற்படுத்த வேண்டுமென்று ஸங்கல்பித்தார்கள். அதற்கு வேண்டிய மூலதனத்தை தாங்களே கொடுப்பதாக செட்டிநாட்டிலுள்ள சில பக்தர்கள் மிகவும் உத்ஸாஹத்துடன் ஏற்றுக்கொண்டார்கள். அப்படியே 1926ல் வேதபாடசாலை ஆரம்பிக்கப் பட்டது. திருநெல்வேலி ஜில்லாவிலிருந்து தருவித்த ஈசுவரகனபாடிகள் என்பவர் அதில் அத்யாபகராக நியமிக்கப்பட்டார். 1927ல் ஸ்ரீமத் ஆசார்யாளே காலடிக்கு நேரில் விஜயமாயிருந்த ஸமயம் அத்வைத வித்யா ஸ்தாபனாசார்யாளான ஸ்ரீ சங்கர்பகவத் பாதருடைய ஜன்ம பூமியில்

அத்வைத வேதாந்த பாடசாலையும் அவசியமிருக்க வேண்டுமென்று ஸங்கல்பித்து, ஸ்ரீ சங்கர ஜயந்தி தினம் தானே உபக்ரமம் செய்து வைத்தார்கள். அதில் பங்களூர் ஸ்ரீ சங்கர மடத்தில் வேதாந்த சாஸ்திரம் வாசித்து உத்தீர்ணரான அதிசாந்த ஸ்வரூபரான வெங்கடாசல சாஸ்திரிகளை அத்யாபகராக நியமித்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் அங்கு தங்கியிருந்த ஸமயம் நம் தென் தேசத்திலுள்ள பண்டிதர்களான மஹா மஹோபாத்யாய சிதம்பரம் தண்டபாணி தீக்ஷிதர், மஹா மஹோபாத்யாய கருங்குளம் கிருஷ்ண சாஸ்திரிகள், மஹா மஹோபாத்யாய பங்களூர் ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மஹா மஹோபாத்யாய விரூபாக்ஷ சாஸ்திரிகள், மஹா மஹோபாத்யாய வைத்யநாத சாஸ்திரிகள் முதலான வித்வான்கள் வந்திருந்து பிரதி தினமும் உத்ஸவமாகவேயிருந்தது. பிரதி தினமும் வித்வத்ஸபையும் வெகு விமர்சையாக நடந்தது. பக்தர்களும் பல விடங்களிலிருந்து ஏராளமாக வந்து கொண்டேயிருந்து இவ்வித்வான்களுடைய உபன்யாசம் வாக்யார்த்தங்களைக் கேட்டும் ஆலயங்களில் தர்சனம் செய்தும் ஸ்ரீ ஸ்வாமிகளவர்களின் உபதேசங்களையும் அனுக்ரஹத்தையும் விசேஷமாகப் பெற்றும் கிருதார்த்தர்களானார்கள்.

இவ்விதம் வேத பாடசாலையும், வேதாந்த பாடசாலையும் ஏற்பட்டதும் தர்சனார்த்தம் வரும் யாத்ரீகர்களின் ஸௌகரியத்திற்காக ஒரு ஸத்தி



ஜகத்குரு ஸ்ரீ சந்திரசேகர பாரதீ ஸ்வாமிகள்.



ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகள்.

ரமும் அவசியமாயிற்று. திருவாங்கூர் ஸமஸ்தா தானத்திலிருந்து யாத்திரிகர்களுக்கு ஜாகையாக சில கட்டிடங்கள் கட்டப்பட்டன. ஆனல் போஜன வசதி மடத்தில் தான் செய்து கொடுக்கவேண்டியிருந்தது. தவிரவும் வேதபாடசாலேக்குத் தனியாக ஒரு கட்டிடமும் கட்டவேண்டிய அவசியம் ஏற்பட்டது. அத்துடன் இவ்விரு பாடசாலேகளில் அத்யாபகர்களாயிருப்பவர்களுக்கும், ஆலயகைங்கர்யம் செய்பவர்களுக்கும், மேல்பார்வை செய்யும் அதிகாரிக்கும் ஜாகை அவசியமாயிருந்தது. வேதாந்த பாடசாலே வித்யார்த்திகளாக வருபவர்கள் ஏற்கனவே ஒரு சாஸ்திரத்தில் பாண்டித்யம் ஸம்பாதித்திருக்கவேண்டியிருந்ததால் அநேகமாய் கிருஹஸ்தர்களாகவே இருப்பார்களென்று அவர்களுக்கும் வீடுகள் ஸௌகர்யப்படுத்திக் கொடுக்கவேண்டியிருந்தது. தர்சனர்த்தம் வருகிறவர்களும் குடும்பத்துடன் வந்து கொஞ்சநாள் தங்க நிஜேத்தால் அவர்களுக்கும் ஸௌகர்யம் செய்து கொடுக்க வேண்டியிருந்தது. இவ்வவசியங்களே யும் மற்றும் காரணங்களேயும் கொண்டு காலடியில் ஒரு அக்ரஹாரம் நிர்மாணம் செய்ய வேண்டுமென்று ஸ்ரீஸ்வாமிகளவர்கள் ஸங்கல்பித்தார்கள் ஆதிசங்கர பகவத் பாதாளுடைய ஜன்ம பூமியாயிருந்தும் பல காரணங்களினல் இருந்த விடம் தெரியாமல் போயிருந்த இக்கிராமத்தை மறுபடியும் உஜ்ஜீவனம் செய்து ஸ்தாபிக்கவேண்டியது நியாயமென்றே கருதினர்கள். அவ்விதம் பாடசாலே, கிருஹங்கள் கட்டி அக்ரஹாரம் நிர்மாணம்

செய்ய வேண்டிய பொறுப்பை திருநெல்வேலி ஜில்லா கருங்குளம் எஞ்ஜினீயர் K. R. நாராயண அய்யர் மிகவும் உத்ஸாஹத்துடன் ஏற்றுக்கொண்டார். இவ்விதம் அவசியமான எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டு ஸ்ரீஸ்வாமிகளவர்கள் கொஞ்சநாள் தங்கிவிட்டு திரும்பவும் சிருங்கேரி போய்ச்சேர்ந்தார்கள். அவர்களுடைய ஆக்ஞையையும் ஸங்கல்பத்தையும் அனுசரித்து K. R. நாராயணய்யர் வெகு அழகாக அக்ரஹாரத்தையும் பாடசாலையையும் கட்டிக்கொடுத்தார். இவ்விதம் கட்டும் வீடுகளில் ஒரு வீடு தன் உபயமாக இருக்க வேண்டுமென்று கல்லிடைக்குறிச்சி ரு. ச. அ. செ. காசிஅய்யர் அதற்குள்ள மூலதனத்தை ஸமர்ப்பித்தார். இவ்விதம் கட்டப்பட்ட அக்ரஹாரத்திற்கு வரும் பாதை முன் முகப்பிலுள்ள விஜய தோரணத்தில்

कालट्यभिख्याग्रहारं जनिभूमौ जगद्गुरोः ।
पुनरुज्जीवयांचक्रे चन्द्रशेखरभारती ॥

என்று எழுதப்பட்டு விளங்கி வருகிறது.

இரண்டு பாடசாலைகளிலுமுள்ள வித்யார்த்திகளுக்கு ஜாகை போஜனாதி வஸதிகள் மடத்திலிருந்தே செய்யப்பட்டு வருகின்றன. சில பக்தர்கள் இந்த கைங்கர்யத்திற்கு வேண்டிய திரவிய ஸஹாயம் செய்து வந்தார்கள். அவர்களில் ஆலப்புழை பிச்சுவய்யர் என்ற தனிகர் இந்த தர்மம் தன் குடும்பத்திலிருந்து சாசுவத

மாய் நடந்து வரவேண்டுமென்று கருதி வருஷம் ஒன்றுக்கு முன்னூறு ரூபாய் கொடுத்து விடும்படி நிரந்தரமான ஏற்பாடு செய்திருக்கிறாரென்பது குறிப்பிடத்தக்கது. ஸாதாரணமாக வேதாத்யயனத்திற்கு ஏழு வருஷ காலமும், வேதாந்த அத்யயனத்திற்கு ஆறு வருஷ காலமும் ஆகின்றன. ஸத்திரம், பாடசாலைகள், ஆலயங்கள், வீடுகள், தோப்பு முதலிய எல்லாவிஷயங்களையும் ஜட்ஜ் A. ராமச்சந்திரய்யர் மேல் பார்வையில் சிருங்கேரி மடத்திலிருந்து நியமிக்கப்பட்ட ஸூப்ரின்டெண்டெண்டு கவனித்து நடத்தி வருகிறார். A. ராமச்சந்திரய்யர் காலமான பிறகு மேல்பார்வை பொறுப்பை ஸ்ரீஸ்வாமிகளவர்களின் ஆக்ஞையை முன்னிட்டு மன்னார்குடி மஹாமஹோபாத்யாய ராஜு சாஸ்திரிகளின் தமயனார் குமாரரும் ஸப் ஜட்ஜ் பதவியிலிருந்தவருமான A. ஸாம்பமூர்த்தி அய்யர் தன் ஆயுள் வரை ஏற்று நடத்தி வந்தார். அவருக்கு ஸஹாயமாக கார்யதர்சி ஸ்தானம் வஹித்து ஸ்ரீசங்கர ஜயந்தி மஹோத்ஸவத்தை நடத்தும்படி திருநெல்வேலி வக்கீல் R. கிருஷ்ணஸ்வாமி அய்யர் நியமிக்கப்பட்டு 1928 முதல் 1939 வரை நடத்தி வந்தார். காலடியில் ஆலயம் நிர்மாணமானது முதலே ஸ்ரீசங்கர ஜயந்தி உத்ஸவம் அதிவிமர்சையாக பிரதி வருஷமும் நடத்தப்பட்டது. ஸ்ரீஸ்வாமிகளவர்கள் வேதாந்த பாடசாலையும் ஏற்படுத்தியானபிறகு இன்னம் விமர்சையாக நம் தேசத்திலுள்ள பிரஸித்த வித்வான்களைத் தருவித்து

வாக்யார்த்தம் உபன்யாஸங்கள், வேதாத்யயன ஸம்பத்துள்ள பெரியோர்களைத் தருவித்து வேத பாராயணம் முதலான விசேஷ அம்சங்களுடன் நடத்தப்பட்டது. கொஞ்சநாள் சென்று ஸ்ரீமத் ஆசார்யாள் உத்ஸவ மூர்த்தியும் பிரதிஷ்டை செய்யப்பட்டு ஸ்ரீசங்கர ஜயந்தி உத்ஸவத்தில் மேளம், ஸ்வஸ்திவாசனம், பஜனையுடன் ஊர்வலம் நடத்தப்பட்டு வருகிறது. மேலே கண்ட குனிகல் ராமசாஸ்திரிகள், வித்யாநிதி விரூபாக்ஷசாஸ்திரிகள், மீமாம்ஸா கண்டீரவ வைத்யநாதசாஸ்திரிகள் முதலானவர்களைத் தவிர பங்களூர் மஹாமஹோபாத்யாய பஞ்சாபகேச சாஸ்திரிகள் ஆரடிக்குப்ப ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மைஸூர் சங்கர நாராயண சாஸ்திரிகள், சிருங்கேரி சாமாபட்டர், ஸுந்தர சாஸ்திரிகள், மாத்தூர் நாராயண சாஸ்திரிகள், சிவஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள் மல்லிக்கரை ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், பங்களூர் ஸுப்பாவதானிகள், வெங்கடேச சாஸ்திரிகள், பங்களூர் ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகள், ஸூர்யநாராயண சாஸ்திரிகள், பொள்ளாச்சி ராமகிருஷ்ண சாஸ்திரிகள், புதுக்கோட்டை ராகவ சாஸ்திரிகள், அரவங்குளம் விசுவநாத சாஸ்திரிகள், கல்கத்தா மஹாமஹோபாத்யாய அனந்த கிருஷ்ண சாஸ்திரிகள், திருநெல்வேலி ராஜவல்லப சாஸ்திரிகள், கல்லிடைக்குறிச்சி சங்கர சாஸ்திரிகள், திருவனந்தபுரம் ஸாம்பசிவ சாஸ்திரிகள், திருப்பணத்துரை சங்கரநாராயண சாஸ்திரிகள், திருவையாறு விசுவநாத சாஸ்திரிகள், சேங்காலிபுரம் வைத்ய

நாத் சாஸ்திரிகள், போலகம் ஸுந்தரேச சாஸ்திரிகள், மதுரை ஸுப்ரஹ்மண்ய சாஸ்திரிகள், மஹாமஹோபாத்யாய கிருஷ்ணமூர்த்தி சாஸ்திரிகள் முதலான அநேக வித்வான்கள் உத்ஸவத்தில் கலந்து கொள்வார்கள். அங்கு நடக்கும் சாஸ்திர பரீக்ஷையில் உத்தீர்ணரானவர்களுக்கு யதாக்ரமமாக ஸம்பாவனை செய்யப்படும். வித்வான்களுக்கு கிரமப்படி நடக்கும் ஸம்பாவனையைத்தவிர ஒவ்வொரு வருஷமும் ஒரு குறிப்பிட்ட வித்வானுக்கு உத்தம ஸம்பாவனையாக ரூ. 75 கொடுக்க வேண்டுமென்று மைஸூர் H. ஹிரியண்ணா என்பவர் தன் குருவான கோபிசெட்டிப் பாளையம் ராமஸ்வாமி சாஸ்திரிகளின் ஞாபகார்த்தமாக மடத்தில் ஸமர்ப்பித்திருந்த மூலதனத்தின் விருத்தியாம்சத்திலிருந்து கொடுக்கப்பட்டு வருகிறது.

காலடி இவ்விதம் ஒரு வித்யாஸ்தானமாக ஏற்பட்டதற்குத் தக்கபடி ஒரு புஸ்தக கோசமும் இருப்பது அவசியமென்று தோன்றி, தென் ஜில்லாக்களில் மிகவும் ஆஸ்திகராய் விளங்கின ஜில்லா ரிஜிஸ்டிரார் T. கிருஷ்ணஸ்வாமி அய்யர் காலஞ் சென்றபின் அவர் சேகரித்து வைத்த ஸம்ஸ்கிருத புஸ்தகங்கள் யாவையும் காலடி புஸ்தககோசத்திற்காக வாங்கப்பட்டது. பின்னுல் பலவிடங்களிலிருந்து புஸ்தகங்களை ஸங்கிரஹம் செய்து விருத்தி செய்யப்பட்டிருக்கிறது.

காலடி வேதபாடசாலையில் அத்யாபகராக முதலில் நியமிக்கப்பட்ட ஈசுவர கனபாடிகள் கால

மான பிற்பாடு அவர் ஸ்தானத்தில் அவர் புத்திரர் ஸீதாராம கனபாடிகளே அத்யாபகராக நியமிக்கப் பட்டார். இவ்விதம் அக்ரஹாரம் நிர்மாணமாகி வேதகோஷமும் ஏற்பட்டு சோபித்து வருகையில் இந்த கிராமத்தில் ஒரு அக்னி ஹோத்ரியாவது இருக்கவேண்டும் என்று ஸ்ரீமத் ஆசார்யார் ஸங்கல்பித்தார்கள். அதற்கு அனுகுணமாக ஸீதாராம கனபாடிகளே அக்னி ஆதானம் செய்து கொள்ள நினைத்ததை ஸ்ரீஸ்வாமிகளவர்கள் மிகவும் ஸந்தோஷத்துடன் அனுமோதித்து அப்படியே அவருக்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களையும் செய்து கொடுத்ததின் பேரில் விதி வித்தாக ஸோமயாகம் செய்து தன் கிருஹத்தில் அக்னிஹோத்ரசாலை நிர்மாணம் செய்து திரேதாக்னியை தன் ஆயுள்வரை யதாக்ரமமாக ஆராதித்து வந்தார். அவருக்குப்பிற்பாடு, காலடி வேதாந்த பாடசாலையில் அத்யயனம் செய்து வந்த N. N. ராமஸ்வாமி சாஸ்திரிகள் வேதாத்யயனம் செய்வித்து வருகிறார். வேதாந்த பாடசாலையில் அத்யாபகராயிருந்த வெங்கடாசல சாஸ்திரிகள் 1945ல் காலமானபிறகு, உபநயனமானது முதல் காலடி வேத பாடசாலையில் அத்யயனம் பூர்த்தியாக செய்துவிட்டு பிறகு வேதாந்த பாடசாலையில் சேர்ந்து அதிலும் முதலாவதாக தேறின N. S. கிருஷ்ணசாஸ்திரிகளே அந்த ஸ்தானத்திற்கு நியமிக்கப்பட்டு வேதாந்த பாடம் சொல்லி வருகிறார். இப்பொழுது காலகதியினால் இரண்டு பாடசாலைகளிலும் வித்யார்த்திகள் மிகக்

குறைவாக இருந்து வருவது வருந்தத்தக்கது. ஆனாலும் ஆசார்யாளின் பரிபூர்ண அனுக்ரஹத்தினால் அவர்களுடைய ஸங்கல்பப்படி இது ஒரு பெரிய வித்யாஸ்தானமாக நாளடைவில் ஏற்பட்டு விடுமென்பதில் ஸந்தேஹமில்லை.

ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் சிருங்கேரிக்கு 1927ல் திரும்பிப் போனபோதிலும் காலடி ஸ்தாபனங்களைப்பற்றி எப்பொழுதும் மிகவும் அக்கரையுடன் கவனித்து வந்தார்கள். காலடிக்கு மறுபடியும் வந்து கொஞ்சகாலம் அங்கே வாஸம் செய்ய வேண்டுமென்ற எண்ணம் தோன்றி 1940ல் அங்கு வந்து பத்துமாஸ காலம் தங்கினார்கள். தக்ஷிண தேசத்திலுள்ள சிஷ்யர்களுக்கு அவர்களை தர்சித்து விசேஷ அனுக்ரஹம் பெறுவதற்கு ஸந்தர்ப்பம் கிடைத்தது. அவர்கள் அங்கே இருந்த காலத்தில் திருவாங்கூர் ஸமஸ்தானத்திலிருந்தே ஸகல ஸௌகர்யங்களும் செய்யப்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது. அந்த ஸமயம் திருவாங்கூர் கொச்சி ஸமஸ்தானத்திய ராஜ வம்சஸ்தர்களும் திவான் முதலான அதிகாரிகளும் அடிக்கடி தர்சனத்திற்கு வந்து போய்க்கொண்டிருந்தார்கள். ஸ்ரீ ஸ்வாமிகளவர்கள் 1941ல் சிருங்கேரிக்குப் போனபிறகும் காலடி ஞாபகமாகவே இருந்து வந்திருப்பதாகத் தெரிகிறது. அவர்கள் 1954ல் ஸித்தியாவதற்கு சில நாட்கள் முன்னமே கூட காலடி யாத்திரையைப்பற்றிய பிரஸ்தாபமேற்பட்டிருப்பதாகத் தெரிகிறது. அவர்களுடைய ஸங்கல்பத்தை

பூர்த்தி செய்வதற்குப் போல, அவர்கள் ஸ்தானத்தில் இப்பொழுது விளங்கி வருகிற ஜகத்குரு ஸ்ரீ அபிநவ வித்யாதீர்த்த ஸ்வாமிகளவர்கள் 1956 மத்தியில் காலடிக்கு விஜயம் செய்து அங்கேயே வியாஸபூஜை, சாதுர்மாஸ்ய ஸங்கல்பம், நவராத்திரி பூஜை இவைகளைச் செய்தார்கள். தென் தேசத்திலுள்ள சிஷ்யகோடிகள் ஏராளமாக வந்து தர்சித்து கிருதார்த்தர்களானார்கள். அந்த ஸமயம் திருவனந்தபுரம் கொச்சி ஸமஸ்தானம் ராஜப் பிரமுகர் ஸ்ரீ சித்திரை திருநாள் காலடிக்கு வந்து மிகவும் பக்தி சிரத்தையுடன் தர்சனம் செய்து விசேஷ அனுக்ரஹத்திற்குப் பாத்திரமானது குறிப்பிடத்தக்கது.

காலடியில் முக்கியமாக நடக்கும் உத்ஸவங்கள் ஸ்ரீ சங்கர ஜயந்தி, நவராத்திரி, மஹா சிவராத்திரி. இந்த ஸமயங்களில் ஏராளமான சிஷ்யர்கள் தர்சனார்த்தம் வருகிறார்கள். அவர்களுக்கு வேண்டிய ஸகல ஸௌகர்யங்களையும் மடத்திலிருந்தே செய்துகொடுக்கிறார்கள். சிஷ்யர்களும் அங்குள்ள மூர்த்திகளின் விசேஷ ஸாந்நித்யத்தை அறிந்து பலவிதமாக பிரார்த்தனைகள் செய்து தங்கள் தங்கள் அபீஷ்டங்களை அடைந்து வருகிறார்கள். ஆதி ஆசார்யாளின் அவதாரத்திற்கு தக்க ஸ்தலம் என்பதினாலேயே மேன்மை பெற்றது. அவருடைய ஜன்ம பூமியாக ஏற்பட்டு அவருடைய பாத தூளியால் அதி பவித்ரமாக ஆக்கப்பட்டது. பின்னால் தன் அவதார பிர

யோஜனமான வைதிக தர்ம பிரதிஷ்டையை செய்து லோகத்தில் அத்வைத வித்யா பிரதிஷ்டாபனுசார்யார் ஷண்மதஸ்தாபனுசார்யார் முதலான அந்வர்த்தமான பிருதாவளியுடன் பிரகாசித்துவரும் ஸமயத்திலும் தன் தாயாரின் ஸம்ஸ்காரமென்ற வியாஜத்தினுல் மறுபடியும் வந்து தன் பாத துளியால் அனுக்ரஹிக்கப்பட்ட ஸ்தலம். அவருடைய சாபத்தினுல் பீடிக்கப்பட்டதென்ற தோஷத்தை அவருடைய அம்சபூதகர்ளான ஸ்ரீ ஸச்சிதாநந்த சிவாபிநவ நரஸிம்ஹ பாரதி ஸ்வாமிகளென்று பிரசித்தராயிருந்த ஜீவன்முக்தரால் நிவாரணம் செய்து அங்கேயே ஆதி ஆசார்யாளுடைய மூர்த்தியையும், ஸ்ரீ சாரதாம்பாள் மூர்த்தியையும் பிரதிஷ்டை செய்து நம் பரதகண்டத்திற்கே முக்கிய யாத்திரா ஸ்தலமாக செய்யப்பட்டது. அவர்களாலும் அவர்களுக்குப் பின் பீடாதிபத்யம் வஹித்து வந்தவர்களாலும் விசேஷமாக ஆராதிக்கப்பட்டும், அவர்களுடைய நியமனத்துக்குள்பட்டு வைதிக விதானமாக பிரதி தினம் பூஜை செய்யப்பட்டும் வரும் மூர்த்திகளில் விசேஷ ஸாந்நித்யம் ஏற்பட்டிருப்பதில் ஆச்சர்யமில்லை. இவ்விதம் மஹான்களுடைய பிரார்த்தனைக்கு இணங்கி காலடி க்ஷேத்திரத்தில் மூர்த்தீகரித்து பிரஸன்னமாயிருக்கிற ஸ்ரீமத் சங்கர பகவத்பாதாசார்யாள், ஸ்ரீ சாரதாம்பாள், இவர்கள் ஆஸேது ஹிமாசலமுள்ள ஸகல ஆஸ்திக ஜனங்களுக்கும் தங்களுடைய கருணுகடாக்ஷத்தினுல் ஸகலவிதமான சிரேயஸ்களும் ஏற்படும்படி

அனுக்ரஹித்து வருவார்களென்பதில் கொஞ்சமேனும் ஸந்தேஹமில்லை. அக் கருணகடாக்ஷத்திற்கு பாத்திரமாகும்படி நாம் பக்திசிரத்தையுடன் பிரதிதினமும் அவர்களை ஸ்மரித்து ஆராதித்து வருவோமாக! இவ்விதம் நம்முடைய க்ஷேமத்தையே உத்தேசித்து இந்த திவ்யக்ஷேத்திரத்தை நிர்மாணம் செய்து மூர்த்திகளை பிரதிஷ்டை செய்து அனுக்ரஹித்த ஸ்ரீ ஆசார்யாளுடைய பாதாரவிந்தங்களில் மிக்க நன்றியுடன்கூடின வந்தனங்களை பிரதிதினம் ஸமர்ப்பிப்போமாக!

श्रीकालटीधरणिभूषणभूतजन्मन्
जन्मादिदुःखविनिवारणबद्धदीक्ष।
कारुण्यपूर्णनयनावनिदेवभाग्य
श्रीशंकरार्य मम देहि पदावलम्बम् ॥



ஸ்ரீ ராமகிருஷ்ண பிரஸ், மதுரை:—57.

பிழை திருத்தம்

பக்கம்	வரி	பிழை	திருத்தம்
18	17	நாம	தாம
25	20	ரும,	ரு.
30	22	யிருந்தும்	யிருக்கும்
34	6	கிரணம்	வரணம்
,,	24	ஸங்கல்பங்	ஸங்கல்பர்
35	8	मुक्ता	मुक्त्वा
40	23	....तात्ति	तत्ति
41	25	....न्रा	नरा....
43	17	सायस्त्र	साहस्रा
,,	18	दृष्ट्व	दृष्ट्वा
44	18	....चिह्व्या	चिह्ष्या
45	2	....मह्रु....	....मह....
,,	9	....दि्व्य....	....दिव्य....
,,	19	....जंगद्गरुः	....जंगद्गुरुः
,,	24	....महुिम....	....महिम....
51	13	வருகிருர்,	வந்தார்
53	16	விருத்தியாம்ச.,	விருத்தியம்ச..
54	14	வித்தாக	வத்தாக

Copies can be had of:

SRI RAMAKRISHNA PRESS,

23, SAMBANDAMURTHI STREET,

MADURAI.